# கலைஞர் ஒரு
# கலைக்களஞ்சியம்

வழக்கறிஞர் **ந. இளங்கோ**



1924 - 2018

நூலாசிரியர் பற்றி...



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த தூத்துக்குடியில் 1978ஆம் ஆண்டு பிறந்தார். சட்டப் படிப்பை மதுரை அரசு சட்டக் கல்லூரியில் பயின்றார். மூத்த வழக்கறிஞர்கள் திரு R.ஜானகிராமுலு மற்றும் திருD.வீரசேகரன் ஆகியோரிடம் இளம் வழக்கறிஞராக பணியில் சேர்ந்தார். மதுரை உயர்நீதிமன்றத்தில் கடந்த 16ஆண்டுகளாக வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார்.2010, 2011 ஆண்டுகளில் மதுரை உயர் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக பணியாற்றினார். தற்போது மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தில் (MMBA) பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்து வருகிறார். பல்வேறு அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கு சட்ட ஆலோசகராக பணியாற்றி வருகிறார். சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறார். இவர் குடும்பத்தினரோடு பகுத்தறிவு, இன உணர்வு, மொழி உணர்வு கொண்டவராக வாழ்ந்து வருகிறார்.

# கலைஞர் ஒரு கலைக்களஞ்சியம்

## KALAINGAR IS AN ENCYCLOPEDIA



வழக்கறிஞர். ந. இளங்கோ

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கலைஞர் ஒரு கலைக்களஞ்சியம் |
| ஆசிரியர் | : | வழக்கறிஞர்.ந.இளங்கோ |
| முதல் பதிப்பு | : | 2020 |
| பக்கங்கள் | : | 166 |
| விலை | : | ₹ 250.00 |
| தொகுப்பு, வெளியீடு மற்றும் உரிமை | : | பகுத்தறிவு பதிப்பகம்<br>'தமிழகம்', இராஜீவ் காந்தி நகர்,<br>உலகநேரி, மதுரை-625107<br>☎ 0452 2422222 |

# என்னுரை

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் இறப்பு உலகில் உள்ள அனைத்து தமிழர்களுக்கும் ஒரு பேரிழப்பு ஆகும். டாக்டர் கலைஞர் அவர்கள் 07.08.2018 அன்று மாலை 6:10 மணியளவில் மரணமடைந்தார் என்ற செய்தி அறிந்ததும் அனைத்து தமிழ்மக்களின் வீடுகளிலும் இருள்சூழ்ந்தது. அவர்கள் வீட்டில் வாழ்ந்த ஒருவர் மரணித்ததாகவே அனைவரும் கருதினர். சோகமே உருவாக தொலைக்காட்சி பெட்டி முன் அமர்ந்து ஒவ்வொரு நிகழ்வையும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர். வாழ்க்கை முழுவதும் போராடி வெற்றி பெற்ற கலைஞர் மறைந்த பின்பும் நீதிமன்றத்தில் போராடி வெற்றியை கண்டார். டாக்டர் கலைஞர் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட அன்று இரவு வெகுநேரம் ஆகியும் தூக்கம்வராமல் நானும் எனது வாழ்க்கை இணையர் திருமதி

க.அகிலாகுமாரி அவர்களும் கைபேசியில் புலனம் (whatsapp), முகநூல் (Facebook) போன்றவற்றில் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களை பற்றி பல செய்திகளை படித்துக் கொண்டிருக்கும் போது, எனது வாழ்க்கை இணையர் அவர்கள் கடந்த இரண்டு தினங்களாக நாம் அறியாத பல செய்திகள் புலனம் (whatsapp), முகநூல் (Facebook) போன்றவற்றில் வந்துள்ளதை என்னிடம் சுட்டிக்காட்டி ஏன் இதை நீங்கள் ஒரு தொகுப்பாக வெளியிடகூடாது? நமக்கு பின்னால் வரும் தலைமுறைக்கு டாக்டர் கலைஞர் அய்யா பற்றி தெரிந்துகொள்ள இது ஒரு ஆவணமாக இருக்குமே! என்று கூறி, அதை உடனடியாக நிறைவேற்றுங்கள் என என்னிடம் அன்பு கட்டளையிட்டார். அவரின் ஆணைக்கு இணங்க அடுத்த கனமே சரி என்று ஒப்புக்கொண்டு என் பணியைத் தொடங்கினேன்.

இந்த தொகுப்பானது டாக்டர் கலைஞர் அய்யா அவர்களை பற்றி புலனம் (whatsapp), முகநூல் (Facebook) மற்றும் பகரி (Twitter) போன்றவற்றில் வந்துள்ள செய்திகளின் தொகுப்பு ஆகும். இதில் என்னுடைய கருத்து துளியளவும் இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

எனது தந்தையார் திரு.பொ.நடராசன் அவர்கள் பணிநிறைவு பெற்ற நீதிபதி ஆவார். பெரியார் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர். அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் இருவரையும் மானசீக குருவாக ஏற்றுக்கொண்டவர். அதனால் சிறுவயது முதலே எங்களுக்கு திராவிட பாலூட்டி வளர்த்தார். 1990ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது, தமிழ் இலக்கிய மன்றம் நடத்திய

பேச்சுப் போட்டியில் நான் விரும்பும் தலைவர் “அறிஞர்அண்ணா” என்ற தலைப்பில் பேசி முதல் பரிசு வென்றேன். நான் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் டாக்டர் கலைஞர் அவர்களிடம் (அவரிடம் அனுமதி பெறாமல்) இரவலாக பெற்ற வார்த்தைகள். ஆம் டாக்டர் கலைஞர் அவர்கள், அறிஞர் அண்ணாவைப் பற்றி பேசிய ஒலிநாடாவை வாங்கி அதை ஒலிப்பதிவன் (Tape Recorder)-ல்போட்டு, ஒவ்வொரு வார்த்தையும் நிறுத்தி, அதை ஒவ்வொன்றாக பேப்பரில் எழுதி மனப்பாடம் செய்து, டாக்டர் கலைஞர் அவர்கள் பாணியிலேயே பேசி முதல் பரிசு வாங்கியது இன்றும் எனக்கு ஒரு பசுமையான நிகழ்வாக இருக்கிறது. நான் பேசிய ஒவ்வொரு வரியும் இன்றும் நீங்காமல் நினைவில் உள்ளது. இன்று என்னை தூக்கத்தில் எழுப்பி பேசச் சொன்னால் கூட அந்த தலைப்பை மறக்காமல் பேச முடியும். அதற்கு காரணம் என்னுடைய அறிவுத்திறனல்ல. டாக்டர் கலைஞர் அவர்களின் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் தான் . டாக்டர் கலைஞர் அவர்கள் மேல் மேலும் ஈர்ப்புக்கு காரணம், எனது மூத்த சகோதரர் திரு.ந தமிழ்மணி அவர்கள் பத்தாம் வகுப்பு படிக்கும் பொழுது “நான் விரும்பும் தலைவர் டாக்டர் கலைஞர்” என்ற தலைப்பில் பேச்சு போட்டியில் பங்கு

கொண்டு விருதுநகர் மாவட்டத்தில் முதலிடம் பிடித்து, அப்பொழுது சபாநாயகராக இருந்த தமிழ்க்குடிமகன் அவர்களிடம் பரிசு பெற்றார். அப்பொழுது நான் ஆறாம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். கலைஞரின் பராசக்தி, மனோகரா உள்ளிட்ட திரைப்பட வசனங்களை எனது சகோதரர் பேசும்போது நான் கலைஞரின் தீவிர ரசிகர் ஆனேன். இவ்வாறு எங்கள் குடும்பமே கலைஞரின் தமிழை படித்து வளர்ந்தது.

டாக்டர் கலைஞர் அவர்களை இதுவரை மூன்று முறை நேரில் பார்த்திருக்கிறேன். முதன் முறையாக1990-ம் ஆண்டு திருத்துறைப்பூண்டியிலும் இரண்டாவது முறையாக 2010-ல் மதுரை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டபோதும், மூன்றாவது முறையாக 2012-ல் நீதியரசர் திரு.K. வெங்கட்ராமன் அவர்களின் இல்ல விழாவில் பார்த்துள்ளேன், ஆனால் ஒருமுறை கூட அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுக்கவில்லை. அதற்கு காரணம் அவரைப் பார்த்தவுடன் என்னையே அறியாமல் ஒரு பிரமிப்பு தோன்றும். அவருடைய சிரிப்பு, அந்த கருப்புகண்ணாடி, மஞ்சள்துண்டு, அகலமான கைவிரல்கள், வசீகரமான அவருடைய முகம், அவருடைய சிகப்புநிறம் இவை அனைத்தையும் வாயைத்

திறந்து ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர் சென்றுவிடுவார். அதன் பிறகுதான் எனக்கு நினைவுக்கு வரும் ஒரு புகைப்படம் கூட எடுக்காமல் விட்டுவிட்டோமேயென்று! சிறுவயது முதல் இன்றுவரை டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றி பேசாத நாளில்லை என்றே கூறலாம். இந்நூலினை தொகுப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக கூட இருக்கலாம்.

50ஆண்டு கால தமிழக அரசியல், கலைஞர் அய்யா அவர்களை சுற்றியே அமைந்து இருக்கிறது என்று சொல்வார்கள். அது வெறும் வார்த்தை அல்ல, வரலாற்று உண்மை. அவர் தான் நம்பிய, தான் ஏற்றுக்கொண்ட சமூகநீதி எனும் தத்துவத்திற்க்காக, அதனை செயலாக்கி காட்டுவதற்காக தனது வாழ்நாளில் 80வருடங்கள் செலவிட்டார். தந்தை பெரியாரின் எண்ணங்களில்

கொள்கையில் ஒலித்துக் கொண்டிருந்த பெண் விடுதலைக்கான வேட்கையை நிறைவேற்றும் தலைவராக அவர் உருவெடுத்தார். பெண்ணுக்குச் சொத்துரிமை உண்டு என்பதை சட்டமாக்கினார். நாடாளுமன்றத்தில் அண்ணல் அம்பேத்காரை தோற்கவைத்த இந்த சட்டத்தை மாநிலத்தில் ஏற்றி, வெற்றிகண்டார். பெண்களை சமையல் அறையில் பூட்டிவைத்த ஒரு சமூகத்திடம் பெண்களை காவல்துறைக்கும் ஆசிரியர் பணிக்கும் அனுப்பச் சொல்லி சட்டமியற்றினார். அரசு பணியில் 30 சதவீதத்தை ஒதுக்கீடு செய்தார் என்பது இன்றைக்கு சாதாரணமாக செய்தியாக இருக்கலாம். ஆனால் அன்றைய காலகட்டத்தில் அது எளிய செய்தி அல்ல. பெண்களுக்கு கல்வி கிடைக்காத அவலத்தைப் போக்குவதற்காக எட்டாம் வகுப்பு முடிக்கும் பெண்களுக்கு அரசிடமிருந்து திருமண உதவித்தொகை

கிடைக்கும் என்கின்ற சட்டத்தை உருவாக்கி செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தார். ஐந்தாவது முறையாக அவர் முதல்வராக பொறுப்பேற்ற போது தன்னைப் போலவே பெண்களது நலன் சார்ந்து இயங்க கூடியவராக தளபதிமு.க.ஸ்டாலின் அவர்களை உருவாக்கி, இந்த இயக்கம் ஆற்ற வேண்டிய பணிகளை முன்னெடுத்து செல்வதற்காக, உள்ளாட்சித் துறையை அவரது பொறுப்பில் ஒப்படைத்தார். அதன் வழியே மகளிர் மேம்பாடு சுய உதவிக்குழுக்களின் வளர்ச்சியை, அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்கிற சமூக கட்டமைப்பில் தளபதிமு.க.ஸ்டாலின் அவர்களையும் பங்கு கொள்ளச் செய்தார். எப்போதும் கட்சிக்குள் மகளிரின் பங்களிப்பை அவர் மிக முக்கியமானதாக கருதினார். கட்சிப் பொறுப்புகளில் அவர்களுக்கு பரவலாக இடம் தந்தார்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஒரு பெண்ணை முன்மொழியும் அளவுக்கு கலைஞரிடம் பெண் விடுதலைக்கான தாகம் இருந்தது. அவர் என்றைக்குமே நான் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது இல்லை. நாம் இணைந்து பணியாற்றுவோம் என்பதையே வலியுறுத்துவார். ஒரு தலைவராக, முதல்வராக அவரது செயல்பாடுகள் நிர்வாகத்தில் வெளிப்படுத்திய ஆற்றல், சுறுசுறுப்பு, நினைவாற்றல், இலக்கிய பங்களிப்பு, அரசியல் நாகரீகம், தேர்தல் கூட்டணிகளின் கணக்கீடு, சமூகநலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அவரது சிந்தனை, இதெல்லாம் அவர் குறித்து இந்த நேரத்தில் நாம் ஒப்பீடு செய்வதற்கான ஆளுமையாருமில்லை. 14 வயதில் அரசியல் வாழ்வைத் தொடங்கி, 80 வருடத்தை அதில் செலவிட்டிருக்கிறார். 50வருடங்கள் அவர் ஒரு கட்சியின் தலைவராக பணியாற்றி இருக்கிறார். 13முறை

சட்டசபை தேர்தலில் வெற்றிகண்டுள்ளார். 5முறை முதல்வர் பதவி வகித்துள்ளார். இந்திய அரசியல் வானில் மங்காமல் உலாவரும் ஒரு ஒளிச்சுடர் டாக்டர் கலைஞர்அவர்கள்.

இந்த தொகுப்பு வெளிவர எனக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அண்ணன் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி MLA., அவர்களுக்கும், எனது நண்பர் வழக்கறிஞர் திரு.வில்ஸ்டோதாஸ்பின் அவர்களுக்கும், உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றம், வழக்கறிஞர் அணி நிர்வாகிகளுக்கும் மற்றும் இந்த தொகுப்பை வடித்து கொடுக்க பெரும் துணையாக இருந்து, அச்சுவடிவம் கொடுத்த திரு.சசிகுமார், எனது ஜூனியர் வழக்கறிஞர் திருசோ.க.வெங்கட்ராமன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் இந்த தொகுப்புக்கு அணிந்துரை வழங்கியிருக்கும் எனது தகப்பனார்

பணிநிறைவு நீதிபதி திரு.பொ. நடராசன் அவர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகள். இன்றைய இளைய தலைமுறையினருக்கு டாக்டர் கலைஞர் அய்யா அவர்களை பற்றி தெரிந்துகொள்ள இந்த தொகுப்பு பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

மதுரை

------

இவண்

ந.இளங்கோ
வழக்கறிஞர்,
உதயநிதி ஸ்டாலின் வழக்கறிஞர்அணி,
மதுரை.

## அணிந்துரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும். முன்னாள் முதல்வருமான டாக்டர் கலைஞர் 7.8.2018 அன்று மறைந்தார். கலைஞர் மறைந்தார் என்று சொல்லுவதை விட "ஊடகங்களின் தலைப்புச் செய்தி மறைந்தது" என்று தான் கூற வேண்டும். அய்ம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, அச்சு ஊடகங்களிலும் காட்சி ஊடகங்களிலும், தலைப்புச் செய்தியாகவே இருந்து வந்தார். என் நெருங்கிய நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்லுவார் கலைஞர் இறந்தால் அதிகம் பாதிக்கப்படுவது அவரது இயக்கத் தொண்டர்களை விட அவரது எதிரிகளே" என்பார். கலைஞரை விமர்சனம் செய்தே தங்கள் காலட்சேபத்தை கடத்திக் கொண்டிருந்த எதிரிகள் ஏராளம். அதனால் எதிரிகளுக்கும் வாழ்வு தந்தவர் கலைஞர் என்பது தான் உண்மை.

1946ல் திருவையாற்றில் நடந்த தியாகராஜ அய்யர் உற்சவத்தில் இசையரசு தண்டபாணி தேசிகர் "சித்திவிநாயகனே" என்ற பாட்டைப் பாடியதால், அடுத்து பாட வந்த அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்

"தேசிகர் தமிழ்பாடி சன்னிதானத்தைத் தீட்டுப்படுத்தி விட்டார். நான் இந்த மேடையில் பாடமாட்டேன்" என்று கூச்சலிட்டு தாம்தோம் எனத்தாண்டிக் குதித்தாராம். இதைக் கண்டித்துக் கலைஞர் தனது 22 வயதில் 9.2.1946 "குடியரசு"ஏட்டில் "தீட்டாயிடுத்து" என்ற தலைப்பில் எழுதியதை இன்றைய தலைமுறை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

அவர் 1950 வாக்கில் எழுதிய,

"எழுச்சியுகங்காணுதற்கு

எழுந்து வந்த காளைகாள்!

வீழ்ச்சியுற்ற திராவிடத்தின்

வீரமிக்க தீரர்காள்

கட்டிய நாய்கள் அல்ல நாம்

எட்டிய மட்டும் பாய்வதற்கு

தட்டிய மாத்திரத்தில்

தருக்கர் தலை உருள வேண்டும்!

விருப்பமுள்ளவராம்

வெறும் பதவியில் பல பேர்!

அவர் வேண்டாம்!

நெருப்பின் பொறிகளே!

நீங்கள் தான் வேண்டும்!"

என்ற உணர்ச்சிமிக்க வரிகளைப் படித்து இன்றளவும் திராவிட உணர்வோடு இருப்பவர்கள் ஏராளம்!

அதெல்லாம் சரிதாங்க, அவர் இளமையில் அப்படி இருந்திருக்கலாம் கடைசி காலத்தில் அப்படியில்லை என்று நுனிப்புல் மேய்ப்பவர்களும் உண்டு. அவர் இறந்த பின்பும் உடலை அடக்கம் செய்ய ஆரியர்கள் செய்த சூழ்ச்சி ஒன்றே கலைஞர் கடைசிவரை திராவிட இன உனர்வோடு வாழ்ந்தார் என்பதற்க்கு சான்றாகும். கலைஞரை திராவிடர்களாகிய நாம் உணர்ந்திருப்பதை விட, புரிந்திருப்பதை விட ஆரியர்களே முழுமையாக உணர்ந்திருக்கிறார்கள். புரிந்திருக்கிரார்கள் என்பது

தான் கல்லில் செதுக்கி வைக்கப்பட வேண்டிய உண்மை. இளைய தலைமுறையினர் கலைஞரை சரியாக உணர்ந்து கொள்ள புரிந்து கொள்ள எடுக்கப்பட்ட ஒரு எளிய சிறிய முயற்சி தான் இந்நூல்.

கலைஞரை எழுத்தாளராக இலக்கியவாதியாக மட்டுமே சுருக்கி விட முடியாது. சிறந்த நிர்வாகத் திறன்மிக்கவர் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அவர் முதலைமச்சராக இருந்த போது ஒருமுறை தீபாவளி அக்டோபர் மாதக் கடைசியில் வந்தது. அதனால் அக்டோபர் மாதச் சம்பளம் நவம்பர் 1ம்தேதி வழங்குவதற்குப் பதிலாக அக்டோபர் 26 ஆம் தேதி வழங்க உத்தரவிட்டார். அப்போது தலைமை செயலக ஊழியர்சங்கத் தலைவர் சம்பளத்தை ஆறு தினங்களுக்கு முன்னரே கொடுத்து அடுத்த மாதம் எங்களைக் கடனாளியாக்கப் பார்க்கிறார் கருணாநிதி" என பத்திரிக்கையில் அறிக்கைவிட்டார். அடுத்த நொடியே கலைஞர் இந்த உத்தரவு தலைமைச் செயலக ஊழியர்களுக்குப் பொருந்தாது " என உத்தரவிட்டார்.. அவ்வளவு தான் தலைமைச் செயலக ஊழியர்கள் அனைவரும் அந்ததலைவரிடம் சண்டைக்குப்

போனதோடு அனைத்து ஊழியர்களிடமும் கையெழுத்து பெற்று கலைஞரிடமும் முறையிட்டபின் 26ம் தேதி சம்பளம் தர உத்தரவிட்டார். ஒரு முறை அரசு ஊழியர்கள், ஊதிய உயர்வு கோரிக்கை மனுவை முதல்வர் கலைஞரிடம் கொடுத்து, "உங்கள் பெயரிலேயே **கருணை** உள்ளது அதனால் கருணையோடு எங்கள் கோரிக்கையை கவனியுங்கள்" எனக் கேட்டபோது, கலைஞர், அவர்களிடம் "**கருணை** மூன்றெழுத்து, **நிதி** இரண்டு எழுத்து, கருணையை விட நிதி குறைவாக இருக்கிறது" என்று கூறி அவர்களை சாமாதானம் செய்த சாமர்த்தியம் எந்த முதல்வர்களுக்கும் இருந்ததில்லை. இன்னொருமுறை போக்குவரத்து ஊழியர்கள் பேருந்து நிலையங்களில் ஓய்வு அறை கட்டித்தர வேண்டும் என்று கோரிய போது உடனே அதற்கான உத்தரவை பிறப்பித்ததோடு, ஓய்வு அறையில் அலாரம் அடிக்கும் கடிகாரம் வைக்கவும் உத்தரவிட்டார். அவர்கள் ஓய்வு அறையில் குறித்த நேரத்தில் எழுந்திருக்க இந்த ஏற்பாடு என்றார் கலைஞர். இப்படிப்பட்ட கலைஞரின் நினைவலைகலை இந்நூலில் எடுத்துக்காட்டும்

வகையாக கலைஞர் ஆரம்பித்த திட்டங்களைப் பட்டியலிட்டதோடு கலைஞரைப் பற்றிய 95 சுவாரஸ்யமான தகவல்களும் தரப்பட்டுள்ளன. கலைஞரின் பொன்மொழிகள் மற்றும் நகைச்சுவை அனைவராலும் அறிந்து கொள்ளப்பட வேண்டியவை.

எனவே இளைஞர்கள் அவசியம் படிக்க வேண்டிய நினைவில் கொள்ள வேண்டிய நூல் இது என்பதில் அய்யம்மில்லை. இம்முயற்சியில் ஈடுபட்ட எனது மகன் இளங்கோ உட்பட அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.

மகிழ்வுடன்

பொ. நடராசன்,

நீதிபதி (பணிநிறைவு),

மதுரை.

பொருளடக்கம்

1. என்னை முழுவதும் அறிந்தவர் 1

கலைஞர் கருணாநிதி -அறிஞர்அண்ணா

2. கலைஞர் கட்டுமரம் 4

3. கலைஞரின் பொன்மொழிகள் 11

4. என் உயிர் பறிக்கும் சக்தி, 16

தமிழ் ஒன்றுக்கு மட்டுமே! கலைஞரின் வாக்குமூலம்

5. இறப்பு குறித்து கலைஞரின் கவிதை! 19

6. முத்தமிழ் அறிஞர் 20

7. கலைஞர் கருணாநிதி 95 தகவல்கள் 21

8.கலைஞர் அவர்களின் நகைச்சுவை பதில்கள் 60

9.கலைஞர் ஆரம்பித்த திட்டங்கள் 62

10.கலைஞர் கருணாநிதி வாழ்க்கை குறிப்பு 71

11. சாமர்த்திய பேச்சாளர்! 81

12. கருப்புக் கண்ணாடி, மஞ்சள் சால்வை 82

13. குளித்தலை தொகுதி தேர்தல் பணி 85

14. வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும்

வாழும் கலைஞர்! 93

15. கலைஞர் ஒரு காவியம் 96
16. கிடைத்தற்கரிய வாய்ப்பு 101
17. கருணாநிதிக்கு ஈடு கருணாநிதிதான் 102
18. நாடு உயர்கிறது 103
19. என்ன பேசுவேன் 104
20. கவர்ச்சியுள்ளவர் 105
21. கடவுளுக்கு பிடிக்கும் 106
22. கேட் பாஸ் 107
23. ஆன்மிக கலைஞர் 108
24. ஒரே ஒருமுறை, இப்போது 'அப்பா' என்று
அழைத்துக் கொள்ளட்டுமாதலைவரே?
தளபதிமு.க. ஸ்டாலின் 109
25. தமிழினத்தின் உயிர் எழுத்தே! 112
26. தமிழ் தாயின் மூத்தமகன் 113
27. போய் வா தலைவனே... 114
28. திருநங்கை 115
29. போராளி! 116
30. செம்மொழி நாயகரே 117
31. போய் வா... 118
32. தலைவனில்லாத் தனிநாடு! 119
33. மறுமையில் திரும்பிவா! தலைவா! 121

34. கலைஞர் உருவாக்கிய சென்னை 123
35. மெரினா! 124
36. வென்றார் கலைஞர்! 125
37. முதல்வன் நீ! 126
38. உதயசூரியன்! 127
39. போராடினால்தான் வெற்றி! 128
40. சென்று வா சூரியனே... 129
41. மீண்டும் வருவாய்! 131
42. கலைஞரின் இறுதிப் பயணத்தில்
மனம் நெகிழ்ந்த அந்ததருணங்கள்... 134
43. உண்மையில் கலைஞர் கர்மவீரருக்கு
மெரினாவில் இடம் தரமறுத்தாரா? 137
44. புலம்புவதற்கல்ல கலைஞரின் மரணம்,
கொண்டாடப்பட வேண்டியது. 143



என்னை முழுவதும் அறிந்தவர் கலைஞர் கருணாநிதி -அறிஞர் அண்ணா

**என்னை முழுவதும் அறிந்தவர் கலைஞர் கருணாநிதி**

**அறிஞர்அண்ணா**

கலைஞர் கருணாநிதியின் 45வது பிறந்ததினத்தில் அறிஞர் அண்ணாதுரை ஆற்றிய உரை:- "வண்ணமான எண்ணத்தை சிறுவயதில் பெற்றவர் கலைஞர் கருணாநிதி. இளமைப்பருவம் முதல் நாட்டு மக்களுக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தோடு சில எண்ணங்களை உருவாக்கி, அதை நாடகம், சினிமா, எழுத்து, கவிதை, கட்டுரை மூலம் வடிவம் கொடுத்தார். ஒரு நாளைக்கு கலைஞர் கருணாநிதி எத்தனை மணிநேரம் தூங்குகிறார் என்பதை யாராவது அவருக்குத் தெரியாமல் பார்த்தால் தான் இந்த திறமை பெற்றதன் அடிப்படை உழைப்பு என்பதை உணர்வீர்கள். உழைக்காமல் இந்தத் திறமை வந்து விடவில்லை. உழைக்காமல் ஒரு திறமைவராது. சிலப்பதிகாரத்தை



கலைஞர் கருணாநிதி இன்றைய நடைக்கு ஏற்ற அளவில் ஆக்கித்தந்திருக்கிறார் என்றால் அதற்கு நூறு முறையாவது முறைப்படி படித்திருப்பார். சங்க இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்; இலக்கணத் துறையிலேயும் பயிற்சி பெற வேண்டும் என்ற மிகுந்த ஆர்வம் படைத்தவர். நமக்குத் தான் ஒரு புகழ் வந்து விட்டதே; இனி நமக்கு தமிழ் இலக்கணம் தேவையில்லை என்று எடுத்தெறிந்துவிட்டு காரியங்களை செய்கின்ற முறையில் அல்லாமல், அவருக்கு கிடைக்கக்கூடிய நேரம்குறைவாக இருந்தாலும் அதிலே தாம் பெற்றிருக்கிற அறிவாற்றலை வளப்படுத்திக் கொள்வதற்கு அதனை மிக நல்ல முறையிலே பயன்படுத்துவார்கள். என்னை முழுவதும் அறிந்தவர்கள் தான் கழகத்திலே இருக்கிறார்கள்.



அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத் தக்கவர்களிலே கலைஞர் கருணாநிதிக்கு மிகச்சிறந்த இடமுண்டு. நான் கவலையோடு இருக்கிறேன் என்றால் முதன் முதலாக கண்டுபிடிக்கக் கூடியது கலைஞர் கருணாநிதி தான். கோபமாக இருக்கிறேன் என்றால் முதன் முதலாக கண்டுபிடிக்கக் கூடியது கலைஞர் கருணாநிதி தான். தண்டவாளத்திலே தலைவைத்துப்படு என்று சொன்னாலும், பொதுப்பணித்துறை அமைச்சராகப் பணியாற்று என்று சொன்னாலும், இரண்டையும் ஒரே விதமான ஆணை என்று ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றிக் கொடுப்பதில் தன் திறமையை வெளிப்படுத்துவார். இந்த முறையில், தம்பி கலைஞர் கருணாநிதியிடத்தில் எனக்கு பாசமும், மரியாதையும் நிச்சயமாக உண்டு என்பதை நாடறியும். கலைஞர் கருணாநிதி மூலமாக நானும், நாடும் இன்னும் நிறைய எதிர்பார்க்கின்றோம். இப்பொழுது செய்திருக்கின்ற காரியங்களைப் போல் பலமடங்கு அதிகமான காரியங்கள் அவருடைய திறமையின் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது."



"கலைஞர் = கட்டுமரம்"

காரணம்,

கடும் புயலில் கப்பல் மூழ்கும்;

காரை வீடும் மூழ்கும்;

கணக்கற்ற செல்வமும் சிதையும்;

கட்டுமரம் சிதையாது;

கரையாது;தேயாது;

இந்த கட்டுமரக்கதை

தெரியாதவர் " கருத்துக்குருடர்"

இருக்கும் போது உலகம்

உதாசீனப்படுத்தும்;

இறந்த பின் உச்சத்தில்
வைக்கும்; இதுஇயற்கை;

கட்டுமரமே !கலங்காதே!
நன்றி கெட்ட உலகமிது;

புல்மீல்ஸ் உண்டுவிட்டு,
புறங்கையை நக்கும் உலகமிது;

குரங்காய் குறுகியவனை
மனிதனாய் நிமிர்த்தியதும்,

"தொட்டால் தீட்டு" என்றவனின்
நாவுக்கு பூட்டு போட்டதும்,

"பகுத்தறிவுக்கொடியை"
பட்டொளி வீசி பறக்கவிட்டதும்,

சாதியால் பிரிந்தவனை
"சமத்துவபுரத்தில்" ஒன்றுசேர்த்ததும்,

"மதவாதிப்பாம்பை "மகுடி
ஊதி மடக்கியதும்,

"சுயமரியாதைச்சங்கு" எடுத்து
"சிங்க நாதம் " முழங்கியதும்,

அந்த ஓங்கார ஒலியால் உச்சிக்
குடுமிகளை ஓட ஓட விரட்டியடித்ததும்,

நான்" நாலாந்தர முதல்வர் "என
நெஞ்சு நிமிர்த்தி நின்றதும்,

தீண்டாமை "ஆபத்தான ஆமை"
என அறிவு உடுக்கை அடித்ததும்,

முகம் சுழிக்கும் மூன்றாம் பாலை
திருநங்கையென உச்சி முகர்ந்ததும்,

மாற்றுத்திறனாளி என ஊனம்
உற்றோருக்கு உரிய பெயரிட்டதும்,

வாழவழியற்றோர்க்கு வாரியம்
அமைத்து காரியம் ஆற்றியதும்,

மண்குடிசைகள் மச்சுவீடுகளானதும்
பிச்சையெடுப்பதை பிழை என்றதும்,

ஆட்சி கலைக்கப்பட்டதை," சஸ்பென்ஸ்

முடிந்தது " என முற்றுப்புள்ளியிட்டதும்,

"மானமும் உணர்வும் மனிதனுக்கு
அழகு" என மனிதசாஸ்திரம் சொன்னதும்

"பராசக்தி" படத்தில் பகுத்தறிவுப்
பூக்களை அள்ளித்தெளித்ததும்,

வசனகர்த்தாவுக்கும் புகழ்மாலை
பெற்றுத்தந்து புரட்சி செய்ததும்,

பல பிரதமர்களைச் சுட்டிக்காட்டும்
அதிகார மையமானதும்,
ஐயமின்றி " இந்தியாவின் முதல்
குடிமகளை" முன்மொழிந்ததும்,

மூச்சுமுட்டிய சென்னை முகம்
மலர பாலங்கள் படைத்ததும்,

தமிழ்மையை ஊற்றி குரளோவியம்
தீந்தமிழால் தீட்டியதும்,

வாய்வலிக்க வாசித்ததும்,
தொண்டை தேய பேசியதும்,

எதிரிக்கும் நேசக்கரம் நீட்டி
"அன்புவிலங்கிட்டுப்" பூட்டியதும்,

காமத்துப்பால் தந்த வள்ளுவனை
"குமரியின் " அருகில் நிறுத்தியதும்,
அதே "தெய்வப்புலவனுக்கு "
வள்ளுவர்கோட்டம் வடித்ததும்,

தமிழ் உணர்வுக்காகத் துடித்ததும்
தமிழர் உரிமைக்காக வெடித்ததும்,

"தீயசக்தி " எனத்திட்டியவரையும்
அம்மையார் என அழைத்ததும்,
"வசைபாடியோர் வாழ்க!" என
வாய்நிறைய வாழ்த்தியதும்,

அரசியல் அநாகரீகங்களிடையே
"நாகரீக நாயகனாய்" ஜொலித்ததும்,

"சந்தைமடமான சட்டமன்றத்தை"
"நகைச்சுவைமன்றமாய் "நடத்தியதும்,

பாலம் கட்ட ராமன் B.E படித்தானா?
என ஆரியனை அம்மணமாக்கியதும்,

"சீவிடுவேன்"- என்ற தொகாடியாவை
சீவிப்பார் என வழுக்கையை காட்டியதும்,

வெட்டரிவாளையும், வெற்றிவேலாக்கி
விசித்திரம் காட்டியதும்,

"என் உயரம் நானறிவேன் " என்ற
"தன்னடக்கச்சித்தாந்தம் "பேசியதும்,

தமிழன் மறந்த தமிழை தூசு
தட்டிக் கொண்டாடியதும்,

செம்மொழிப்பரிவட்டத்தை தமிழ்த்தாயின் தலையில் சூட்டியதும்,
தன் உடல், பொருள், ஆவியை
தமிழ்நாட்டுக்கு தாரை வார்த்ததும்,

இந்தக் கட்டுமரம்தான்....
இதே கட்டுமரம்தான்....

"விமர்சனங்களை முகம்மலர
விரும்பும் அரசமரம்தான்"

இன்றைய,

பட்டமரம், மொட்டமரங்களிடையே

இது, உழைத்துக்களைத்த,

**“கட்டுமரம்"**

இன்று இளைப்பாறலாம்...

ஆனால்,

நம்" எண்ணக்கடல் அலைகளில்"

காலம்கடந்து, காலத்தையும்

வென்று பயணிக்கும்....

எப்போதும் சுமக்கும் -இந்த

"என்றும் கவிழாத கட்டுமரம்".




கலைஞரின்பொன்மொழிகள்

1. "தேன்கூடும், கஞ்சனின் கருவூலமும் ஒன்றுதான். காரணம், இரண்டுமே அவற்றை நிரப்பிட உழைத்தவர்களுக்கு பயன்படுவதில்லை".

2. "உண்மையை மறைக்க முனைவது விதையை பூமிக்குள் மறைப்பது போலத்தான்."

3 "தோழமையின் உயிர்த்துடிப்பே, துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதில் தான் இருக்கிறது."

4 "குச்சியைக் குச்சியால் சந்திக்க வேண்டும்... கூர்வாளைக் கூர்வாளால் சந்திக்க வேண்டும்."

5 "மனசாட்சி உறங்கும் சமயத்தில் தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது"

6 புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்... உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும்."

7 "வாழும் போது மனிதர்களைப் பிரித்து வைக்கும் சாதிவெறி, அவர்கள் இறந்த பிறகாவது தணிந்து விடுகிறதா?"

8 "மிஞ்சினால் கெஞ்சுவது எப்படி கோழைத்தனமோ; அதைப் போன்றுதான் கெஞ்சினால் மிஞ்சிகிற வீரமும் ஆகும்."

9 "உண்மையானவனின் பின்னால் ஐந்து பேர் செல்வார்கள்... அந்த உண்மையைப் புரியாதவன் பின்னாலும் ஐந்து பேர் செல்வார்கள்."

10 "இழிவு செய்யும் நண்பர்களை விட, எதிர்த்து நிற்கும் பகைவர் எவ்வளவோ மேல்!"

11 "பதவி என்பது முள்கிரீடம் போன்றது!"

12 "அனுபவம் ஒரு பள்ளிக் கூடம்... ஆனால், அதில் ஆணவக்காரர்கள் கற்றுத் தேர்வதில்லை."

13 'முடியுமா நம்மால்' என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம். 'முடித்தே தீருவோம்' என்பது வெற்றிக்கான தொடக்கம்.

14 "அணு அளவுகூட இதயமிலாத ஒருவருக்கு ஆகாயம் அளவு மூளையிருந்து என்ன பயன்?"

15 "ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறார் என்பதை, அவர் இறந்துபோன நாளில் கணக்கிடத் தெரிந்துகொள்ளலாம்."

16 "தனிமை போன்ற ஒரு கொடுமையும் இல்லை; அதைப் போல் ஒரு உண்மையான நண்பனும் இல்லை."

17 "ஆசைகள் சிறகு ஆகலாம்; அதற்காக கால்களை இழந்துவிட்டு பறந்தால் பூமிக்கு திரும்ப முடியாது."

18 "அடிமையாக இருப்பவன் தனக்குக் கீழே ஓர் அடிமை இருக்க வேண்டும் என்று கருதினால், உரிமைகளைப் பற்றிப் பேச அவனுக்கு உரிமையே கிடையாது."

19 "அதிருப்தியாளர்கள் வளரவளர அவர்களின் மத்தியிலே அவர்களை நடத்தி செல்லும் தலைவன் ஒருவன் தோன்றிவிடுவான்."

20 "தான் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் போது தன் மக்களின் முகம் சுண்டக் கூடாது என்பதில் குறியாக இருப்பது தாய்க்குணம்."


21 "தவறு செய்ய ஆரம்பிக்கிறவனுக்கு அஸ்திவாரத்திலே ஏற்படுவதை விட, அதிக அச்சம் உச்சி போய் சேரும் போது தான் தோன்றுகிறது.

22 "பழியுணர்வு மட்டுமே வாழ்க்கை எனக் கொண்டவர்கள், பகைவர் முயற்சியில்லாமலேயே தமக்கு தாமே குழி வெட்டிக் கொள்வார்கள்."

23 "சிரிக்க தெரிந்த மனிதன் தான் உலகத்தின் மனித தன்மைகளை உணர்ந்தவன்."

24 "கண்ணீரில் மலரும் காதல், சேற்றில் மலரும் செந்தாமரையாகக் காட்சி தருவதும் உண்டு."

25 "துணிவிருந்தால் துக்கமில்லை... துணிவில்லாதவனுக்கு தூக்கமில்லை..."






**``என் உயிர் பறிக்கும் சக்தி, தமிழ் ஒன்றுக்கு மட்டுமே!" கலைஞரின் வாக்குமூலம்**

``நாற்பத்து ஐந்தாவது வயதில் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளானேன். இதோ இன்னும் 15 நாள்களில் ஜூன் 3 ம்தேதி 60-ம் அகவையில் அடியெடுத்து வைக்கிறேன். இனி நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் என்னைப் பொறுத்த வரையில் கல்லறையை நோக்கித்தான் என்றாலும் நான் ஒவ்வோர் அங்குலம் நகரும் போதும் இந்தச் சமுதாயம் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவிடுவதற்கான உழைப்பையே வழங்குவதற்கு உறுதி பூண்டிருக்கிறேன்" 1983-ம் ஆண்டு கலைஞர் கருணாநிதி தனது அறுபதாவது பிறந்தநாளுக்கு முன் எழுதியது.

கலைஞர் கருணாநிதி 1983-ம் ஆண்டு நெஞ்சுக்கு நீதி எழுதும் போது 60 வயதை எட்டியிருந்தார். அப்போது அவர் ``இனி எனது ஒவ்வோர் அடியும் என்னைப் பொறுத்தவரைக் கல்லறையை நோக்கித்தான்" என்று உணர்ச்சி பூர்வாகச் சுட்டிக்காட்டியிருந்தார். அதன் பிறகு ஒரு கட்டத்தில் தனது ஆயுள் பற்றி எழுதிய கலைஞர் கருணாநிதி, ``நான் குறிப்பிட்டுள்ள படி இனியிருப்பது நீடித்த பயணமோ, குறுகிய காலப்



பயணமோ... எனக்குத் தெரியாது. நடைதள்ளாடலாம்... தடைபடலாம்... முடிவுற்றுப் போய்விடலாம். ஆனால், நான் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்றுக்கொண்ட உணர்வுக்கு முடிவே இல்லை" என்றுஅழுத்தமாகச்சொல்லியுள்ளார். அந்தஉணர்வும், போராட்ட குணமும் தான் கலைஞர் கருணாநிதி என்னும் ஆளுமையை மருத்துவ அறிவியலுக்கே சவால் விடும் மனோ தைரியத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது.

அதுமட்டுமல்ல, தொண்ணூறு வயதை நெருங்கும் ஒரு மனிதரின் ஆயுள் குறித்த பேச்சு என்னவாக இருக்கும்? ஆனால், கலைஞர் கருணாநிதியின் பேச்சோ அதற்கு எதிர்மாறாகவே இருந்துள்ளது. குறிப்பாக தனது ஆயுளை எமன் நினைத்தாலும் பறிக்க முடியாது என்று எமனுக்கே எச்சரிக்கை விடும் வகையில் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சில் ``நான் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். தமிழை, தமிழர்களை வாழவைக்க வேண்டும் என்பதற்காக வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். இது சுயநலமாகக் கூட இருக்கலாம். ஆனால், இந்தச் சுயநலத்தை விரும்பாத தாய் நாட்டுப்பற்றுக் கொண்டவனும் தாய்மொழி பற்றுக் கொண்டவனும் இருக்க முடியாது. அந்த வகையில்



நான் சொல்கிறேன், புராணத்திலே, வைதீகத்திலே சொல்வது போல என்னுடைய உயிரை எமன் பறித்து விட முடியும் என்று நான் கருதவில்லை. என்ன அகம்பாவம், நெஞ்சழுத்தம் என்று நீங்கள் நினைக்கலாம். எமன் உறவினரைப் போலவோ, உற்றார் போலவோ வந்து என் உயிரைக் கொண்டு போய் விட முடியாது. அவன் என்னிடம் உயிரைப் பறிக்க எந்த முறையைக் கையாண்டு இருப்பான் என்றால், தமிழ்ப் புலவர் போல கை இரண்டை ஏந்தி என் உயிரைக் கொண்டு போக முடியும். அத்தருணத்தில் புலவனாக என்னிடத்தில் உயிரைப் பிச்சை கேட்டுக் கொண்டு சென்றிருக்க வேண்டும். அதுவும் தமிழுக்காக, தமிழ் புலவனுக்காகப் பிச்சையாக உயிரைப் பெற்றுச் சென்றிருக்க வேண்டும். அப்படி ஒரு காலம் வருகிற வரையில் உயிரை யாருக்கும் கொடுக்கமாட்டேன்... நிச்சயமாக நீங்கள் எண்ணுகிற படி நூறாண்டுக்கும் மேலாக இருக்கும் என் உயிர். அதற்குள்ளே கொடுக்க வேண்டும் என்றால் அது தமிழுக்காக, தமிழ்நாட்டுக்காக, மொழிக்காக, தமிழ் பண்பாட்டுக்காக மட்டுமே இருக்கும்" என்று உறுதியான நெஞ்சோடு சொல்லியுள்ளார் கலைஞர் கருணாநிதி.

## இறப்பு குறித்து கலைஞரின் கவிதை!

உதிராத...
மலர் இல்லை!

உலராத...
பனி இல்லை!

புதிரான
வாழ்க்கை இதில்...
புதையாத பொருள் இல்லை!


உடையாத...
சங்கில்லை!

ஒடுங்காத...
மூச்சில்லை!

இயற்கை
நியதிகளில்...

இறப்பும்...
ஒரு கூறு அன்றோ!





முத்தமிழ்அறிஞர்

வள்ளுவனுக்கு சிலை வைத்து
தமிழை வானுயரச்செய்தவர்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்



**கலைஞர் கருணாநிதி 95 சுவாரஸ்ய தகவல்கள்**

1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ம் வருடம் ஜூன் 3 ம் தேதி அன்று, முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாக பிறந்தார்.

2. கலைஞர் கருணாநிதி தம் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தை. அவருக்கு முன்பாக பெரியநாயகம், சண்முகசுந்தரம் என இரு சகோதரிகள் உண்டு. சண்முகசுந்தரம் அம்மாளின் மகன்கள் தான் முரசொலிமாறனும் முரசொலிசெல்வமும். பெரியநாயகம் அம்மாளின் மகன் அமிர்தம்.



3. கிரிக்கெட் காதலர் கலைஞர் கருணாநிதி என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால், சிறு வயதில் அவருக்கு பிடித்தமான விளையாட்டாக இருந்தது ஹாக்கி. போர்ட் ஸ்கூல் ஹாக்கி டீமிற்காக விளையாடி இருக்கிறார் கலைஞர் கருணாநிதி.

4. கலைஞர் கருணாநிதியின் முதல் மேடை பேச்சு 'நட்பு' குறித்து. எட்டாம் வகுப்பு மாணவராக இருந்தபோது (1939) பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டியில் 'நட்பு' என்ற தலைப்பில் பேசினார்.

5. கலைஞர் கருணாநிதி முதன் முதலில் துவங்கிய பத்திரிகையின் பெயர் மாணவநேசன். 1941ல் வெளியான மாணவநேசன் ஒரு மாத இதழ்.



6. முதன் முதலில் கலைஞர் கருணாநிதி தொடங்கிய அமைப்பு தமிழ் மாணவர் மன்றம்.

7. நீதிக்கட்சியை சேர்ந்த அழகிரிசாமியால் தன் சிறுவயதில் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தவர் கலைஞர் கருணாநிதி. அதன் காரணமாகவே தம் மகனுக்கு அழகிரி என்று பெயர் சூட்டினார்.

8. தான் திராவிட சிந்தனையால் ஈர்க்கப்படாமல் இருந்தால் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருப்பேன் என்று ஒருமுறை கலைஞர் கருணாநிதி கூறினார்.

9. எம்.ஜி.ஆருக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் நட்பு ஏற்பட்டது சேலம் மாடர்ன் தியேட்டரில் தான்.



10. மூன்று முறை திருமணம் செய்து கொண்டவர் கலைஞர் கருணாநிதி .முதல் மனைவி பத்மாவதி. அவருக்கு பிறந்தவர் மு.க.முத்து. திருமணமான சில ஆண்டுகளிலேயே மரணமடைந்தார் பத்மாவதி. கலைஞரின் இரண்டாவது மனைவியான தயாளு அம்மாளுக்கு பிறந்தவர்கள் அழகிரி, ஸ்டாலின், செல்வி மற்றும் தமிழரசு. அவரது மூன்றாவது மனைவியான ராஜாத்தியம்மாளுக்குப் பிறந்தவர் கனிமொழி.

11. கலைஞர் கருணாநிதி எழுதி முதன்முதலில் அரங்கேற்றப்பட்ட நாடகம், 'பழனியப்பன்'. திருவாரூர் பேபி டாக்கீஸில் 1944ல் அரங்கேற்றப்பட்டது.

12. 50களிலிருந்து 70கள் வரை தமிழ்த் திரையுலகில் கோலோச்சிய சிவாஜிகணேசன், எம்.ஜி.இராமச்சந்திரன் ஆகிய இருவருக்கும் மிகப்பெரிய வெற்றிப் படங்களை அளித்தவர் கலைஞர் கருணாநிதி. சிவாஜிக்கு பராசக்தி, மனோகரா. எம்.ஜி.ஆருக்கு மந்திரிகுமாரி, மலைக்கள்ளன்.

13. கலைஞர் கருணாநிதி முதன்முதலில் வசனம் எழுதிய திரைப்படம் 1947ல் வெளியான ராஜகுமாரி. இந்தப் படம் தான் முதன்முதலில் எம்.ஜி.ஆர் முன்னணி வேடத்தில் நடித்த படம்.

14. 1947ல் வெளியான ராஜகுமாரி தொடங்கி, 2011ல் வெளியான பொன்னர் - சங்கர் வரை சுமார் 64 வருடங்கள் திரையுலகில் கதை,



திரைக்கதை, வசனம், பாடல்கள் என பல்வேறு துறைகளிலும் பணியாற்றியிருக்கிறார் கலைஞர் கருணாநிதி.

15. பராசக்தி படம் வெளிவந்த போது, அந்தப் படத்தை கிண்டல் செய்து ஒரு இதழில் "பரப்பிரம்மம்" என்ற பெயரில் கார்ட்டூன் வெளியிடவே, அதே பெயரில் ஒரு நாடகத்தை எழுதி மாநிலம் முழுவதும் நடத்தினார் கலைஞர் கருணாநிதி.

16. கலைஞர் கருணாநிதி கடைசியாக வசனம் எழுதிய தொடர் கலைஞர் தொலைக்காட்சியில் வெளியான ஸ்ரீராமானுஜர் - மதத்தில் புரட்சி செய்த மகான். அந்தத் தொடருக்கு அவர் எழுத ஆரம்பித்த போது அவரது வயது 92. எழுதி வந்த போதே அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது.



17. கலைஞர் கருணாநிதி பத்து சமூக நாவல்களையும் 6 சரித்திர நாவல்களையும் எழுதியிருக்கிறார்.

18. 21 நாடகங்களை கலைஞர் கருணாநிதி எழுதியிருக்கிறார். 1957ல் தி.மு.கவுக்குக் கிடைத்த உதயசூரியன் சின்னத்தைப் பிரபலப்படுத்துவதற்காக உதயசூரியன் என்ற நாடகத்தை எழுதினார்.

19.இனியவை 20 என்ற பெயரில் பயணநூல் ஒன்றையும் கலைஞர் கருணாநிதி எழுதியிருக்கிறார்.

20. கலைஞர் கருணாநிதி பணியாற்றிய படங்களின் எண்ணிக்கை 69.



21. கலைஞர் கருணாநிதி கதை - வசனம் எழுதி எம்.ஜி.ஆர். நடித்த படங்களின் எண்ணிக்கை 9.

22. கலைஞர் கருணாநிதியை ஆரம்ப காலத்தில் எம்.ஜி.ஆர் 'ஆண்டவரே' என்று அழைத்திருக்கிறார்.

23. கலைஞர் கருணாநிதியின் உதவியாளர் சண்முகநாதன், 1969ல் கருணாதியிடம் பணியில் சேர்ந்தவர். கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக உதவியாளராக இருந்து வருகிறார். இரண்டு முறை கோபித்துக் கொண்டு வெளியேறி, மீண்டும் கலைஞர் கருணாநிதியிடம் சேர்ந்திருக்கிறார்.

24. கலைஞர் கருணாநிதிக்கு 'கலைஞர்' என்ற அடைமொழியை வழங்கியது நடிகவேள் எம்.ஆர்.ராதாதான். கலைஞர் கருணாநிதி

| Year | Constituency | Result | Vote percentage | Opposition Candidate | Opposition Party | Opposition vote percentage |
|---|---|---|---|---|---|---|
| 1957 | Kulithalai | Won | | K.A. Dharmalingam | INC | |
| 1962 | Thanjavur | Won | | A.Y.S. Parisutha Nadar | INC | |
| 1967 | Saidapet | Won | | S.G. Vinayagamurthy | INC | |
| 1971 | Saidapet | Won | | Kudanthai Ramalingam | Congress (O) | |
| 1977 | Anna Nagar | Won | 50.1 | G. Krishnamurthy | ADMK | 21.2 |
| 1980 | Anna Nagar | Won | 49.3 | H.V. Hande | ADMK | 48.5 |
| 1984 | Not Contested | Not Contested | Not Contested | Not Contested | Not Contested | Not Contested |
| 1989 | Harbour | Won | 59.0 | K.A. Wahab | Muslim League | 13.0 |
| 1991 | Harbour | Won | 48.7 | K. Suppu | ADMK | 47.2 |
| 1996 | Chepauk | Won | 77.1 | N.S. Nellai Kannan | INC | 17.2 |
| 2001 | Chepauk | Won | 51.3 | R. Damodharan | INC | 43.5 |
| 2006 | Chepauk | Won | 51.0 | Dawood Miah Khan | Independent | 30.0 |
| 2011 | Thiruvarur | Won | 62.9 | M. Rajendran | ADMK | 33.9 |
| 2016 | Thiruvarur | Won | | R. Panneerselvam | ADMK | |



எழுதிய, 'தூக்குமேடை' என்ற நாடகத்தை பார்த்து இந்த பட்டத்தை வழங்கினார்.

25.இதுவரை 13 சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டிருக்கும் கலைஞர் கருணாநிதி, இதுவரை ஒரு தேர்தலில் கூட தோல்வியடைந்ததில்லை.

26.சென்னை சேப்பாக்கம் தொகுதியில் தான் அதிகபட்சமாக மூன்றுமுறை தேர்வு செய்யப்பட்டுள்ளார் கலைஞர் கருணாநிதி. சைதாப்பேட்டை, அண்ணாநகர், திருவாரூர், துறைமுகம் ஆகிய பகுதிகளில் தலா இரண்டுமுறை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

27.1957லிருந்து தற்போது வரை 60 ஆண்டுகளுக்கும் மேலாக சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து வரும் கலைஞர்



கருணாநிதி மிகக்குறுகிய காலத்திற்கு சட்டமேலவை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

28. 33 வயதில் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினரானார் கலைஞர் கருணாநிதி.

29. கலைஞர் கருணாநிதி 45 வயதில் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

30. கலைஞர் கருணாநிதி சட்டமன்றக் கன்னிப்பேச்சே மிகவும் கவனிக்கப்பட்டது. அதில் நங்கவரம் பண்ணை விவசாயிகளுக்காகப் பேசினார் கலைஞர் கருணாநிதி, பிறகு இதற்காக 20 நாட்கள் போராட்டமும் நடத்தி, பிரச்சனைக்குத் தீர்வு கண்டார்.



31. தமிழக சட்டப்பேரவையில் தி.மு.க. சட்டமன்றக் கட்சிக் கொறடா, எதிர்க்கட்சித் துணைத்தலைவர், பொதுப்பணித்துறை அமைச்சர், முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளை கலைஞர் கருணாநிதி வகித்திருக்கிறார்.

32. முதல் முதலாக (1957) தேர்தலில் குளித்தலை தொகுதியில் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதி தன்னை எதிர்த்து நின்ற காங்கிரஸ் வேட்பாளர் கே.ஏ. தர்மலிங்கத்தைவிட 8,296 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

33. இரண்டாவது முறையாக அவர் வெற்றி பெற்றது தஞ்சாவூர் தொகுதியில். 1962 சட்டமன்ற தேர்தலில் அவரை எதிர்த்து நின்ற



காங்கிரஸ் வேட்பாளர் பரிசுத்த நாடாரை 1,928 வாக்கு வித்தியாசத்தில் வீழ்த்தினார் கலைஞர் கருணாநிதி.

34. இந்த 1962 ஆம் சட்டமன்ற தேர்தல் குறித்து சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று உண்டு. தேர்தல் பிரசாரத்தை தொடங்கிய கலைஞர் கருணாநிதி முதல் முதலாக வாக்கு சேகரிக்க சென்றது அவரை எதிர்த்து நின்ற பரிசுத்த நாடார் வீட்டிற்குத்தான் என்ற தகவலை தருகிறார் தஞ்சாவூரை சேர்ந்த முதியவர் ஒருவர்.

35. 1967ஆம் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று தான் திமுக முதல் முதலாக ஆட்சியை பிடித்தது. சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டார் கலைஞர் கருணாநிதி. தன்னை எதிர்த்து நின்ற





காங்கிரஸ் வேட்பாளர் விநாயகமூர்த்தியை விட 20,484 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.


36. 1971ஆம்ஆண்டு சட்டமன்ற தேர்தலிலும் அவர் சைதாப்பேட்டை தொகுதியிலிருந்து தான் போட்டியிட்டார். தம்மை எதிர்த்த ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளர் ராமலிங்கத்தை விட சுமார் 13 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் கலைஞர் கருணாநிதி வென்றார். கலைஞர் கருணாநிதி பெற்ற வாக்குகள் 63,334.

37. 1971ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வரை, திமுக மற்றும் காங்கிரஸ் இடையே இருந்த போட்டி, 1977 ஆம் ஆண்டு தேர்தலில் திமுக - அதிமுக என்று மாறியது. ஆம், எம்.ஜிஆர் அதிமுக என்ற கட்சியை தோற்றுவித்து, தனது நீண்டகால



நண்பரான கலைஞர் கருணாநிதிக்கு எதிராக அரசியல் களத்தில் நின்றார். எம்.ஜி.ஆர் ஆதரவு அலை கடுமையாக வீசியது. இந்த அலையிலும் துடுப்பு போட்டு வென்றார் கலைஞர் கருணாநிதி. அண்ணாநகர் தொகுதியில் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதி தன்னை எதிர்த்து போட்டியிட்ட கிருஷ்ணமூர்த்தியை விட 16, 438 வாக்குகள் அதிகம் பெற்று வென்றார். ஆனால், திமுக ஆட்சியை இழந்தது.

38. கலைஞர் கருணாநிதி மிகக்குறைந்த வாக்குவித்தியாசத்தில் வெற்றி பெற்ற தேர்தல் 1980ஆம் ஆண்டு தேர்தல். அண்ணாநகர் தொகுதியில் எச்.வி. ஹண்டேயை எதிர்த்துப் போட்டியிட்ட




கலைஞர் கருணாநிதி வெறும் 699 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

39. எம்.ஜி.ஆர் மரணத்திற்கு பின் நடந்த 1989 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில், துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டார் கலைஞர் கருணாநிதி. அதிமுக இரண்டாக உடைந்து ஜெயலலிதா அணி, ஜானகி அணி என்று நின்றது. இந்த தேர்தலில் கலைஞர் கருணாநிதி பெற்ற வாக்குகள் 41,632. அவரை எதிர்த்து நின்ற முஸ்லீம் லீக்கின் வஹாப் பெற்ற வாக்குகள் 9641. அதாவது 31,991 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார் கலைஞர் கருணாநிதி.



40. ஜெயலலிதா முதல் முதலாக முதல்வரானது 1991 சட்டமன்றத் தேர்தலில் தான். ராஜீவ்மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலையினால் அதிமுக - காங்கிரஸ் கூட்டணி மாபெரும் வெற்றி கண்டது. துறைமுகம் தொகுதியில் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதியும், எழும்பூர் தொகுதியில் போட்டியிட்ட பரிதிஇளம்வழுதியும் மட்டும் தான் வெற்றி பெற்றனர். கலைஞர் கருணாநிதி பெற்ற வாக்குகள் 30932. அவரை எதிர்த்து போட்டியிட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுப்பு பெற்றவாக்குகள் 30042.

41. 'ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டை ஆண்டவனால் கூடகாப்பாற்ற முடியாது' என்ற ரஜினி சொன்னது



1996 சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் தான். அதிமுகவுடனான கூட்டணி தொடர்பாக முரண்பட்ட காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் கட்சியை விட்டு வெளியேறி தமிழ் மாநில காங்கிரஸ் என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். தி.மு.க மற்றும் த.மா.க கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தது. இந்த தேர்தலில், சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதி, காங்கிரஸ் வேட்பாளர் நெல்லை கண்ணனை 35,784 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார். மீண்டும் முதல்வரானார்.

42. தி.மு.கவும் பா.ஜ.கவும் 2001 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்தன. இந்த தேர்தலிலும் சேப்பாக்கம் தொகுதியில்



போட்டியிட்ட கலைஞர் கருணாநிதி 4834 வாக்கு வித்தியாசத்தில் வென்றார்.

43. தி.மு.க 2006 சட்டமன்ற தேர்தலில் வலுவான கூட்டணி அமைத்தது. திமுக அணியில் காங்கிரஸ், பா.ம.க மற்றும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் இருந்தன. கலைஞர் கருணாநிதி சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்டு 34,188 வாக்குகள் பெற்று வென்றார்.

44. 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில், திமுக 31 இடங்களில் மட்டுமே வென்றாலும், திருவாரூர் தொகுதியில் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதி 50, 249 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.



45. 2016ஆம் ஆண்டு தேர்தலில் தான் அதிகவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். திருவாரூர் தொகுதியில் 68366 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் மாநிலத்திலேயே இது அதிக அளவு.

46. சட்டசபை விவாதங்களிலும் எப்போதும் சிறப்பாக செயல்பட கூடியவர் கலைஞர் கருணாநிதி. ஒரு முறை, "தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கருவறைக்குள் செல்ல உரிமை இல்லையே" என்று பேசிக் கொண்டிருந்த கலைஞர் கருணாநிதியைப் பார்த்து, "கோயிலுக்கே போகாத கலைஞர் கருணாநிதிக்கு இது பற்றி எதற்குக் கவலை?" என்றார் இந்திய தேசிய காங்கிரஸை சேர்ந்த டி.என்.அனந்தநாயகி. "கொலை செய்தவர்கள் மட்டுமா



கோர்ட்டுக்குப் போகிறார்கள். வாதாடுபவர்களும் தானே போக வேண்டும்?" என்றவர் கலைஞர் கருணாநிதி.

47. கலைஞர் கருணாநிதி முதன் முறையாக சட்டமன்றத்தில் பேசி விட்டு அமர்ந்ததும், அப்போது சட்டப்பேரவை தலைவராகஇருந்த யு. கிருஷ்ணாராவ் ஒருகாகிதத்தில், 'Very Good Speech' என்றுஎழுதிகொடுத்தார்.

48. 1974க்கு முன்பாக முதலமைச்சர்கள் சுதந்திரதினம், குடியரசு தினங்களில் கொடியேற்ற முடியாது. ஆளுநர் தான்அதைச் செய்வார். 1974ல் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியிடம் இது குறித்துப் பேசிய கலைஞர் கருணாநிதி, முதல்வர்கள் சுதந்திர



தினத்தன்று கொடியேற்றும் வழக்கத்தை உருவாக்கினார். 1974 ஆகஸ்ட் 15ஆம் தேதி புனித ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றிய கலைஞர் கருணாநிதி, சுதந்திர தினத்தன்று கொடியேற்றிய முதல் முதலமைச்சர்.

49. மனிதர்களை மனிதர்களே இழுத்துச் செல்லும் கைரிக்சா வழக்கம் இந்தியாவின் சில மாநிலங்களில் இன்னும் உள்ள நிலையில், 1973லேயே தமிழகத்தில் அதைத்தடை செய்தார்.

50. 1953ல் திருப்பத்தூரில் நடந்த கார் விபத்தில் தான் கலைஞர் கருணாநிதியின் இடது கண் பார்வை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அடுத்தடுத்த விபத்துகளிலும் அதே கண்ணில் அடிபட்டது.




51. அண்ணாமறைவுக்குப் பிறகு முதல்வரான போது தான் "உடன்பிறப்பே" என முரசொலியில் கடிதம் எழுதத் துவங்கினார் கலைஞர் கருணாநிதி. 1971 முதல் "உயிரினும் மேலான உடன்பிறப்பே" என்று பேசவும் துவங்கினார்.

52. கலைஞர் கருணாநிதி முரசொலியில் எழுதி வந்த "உடன்பிறப்பே" என்ற கடிதத்தொடர், உலகின் நீண்ட தொடர்களில் ஒன்று. முரசொலி துவங்கியதிலிருந்து, 2016ல் உடல்நலம் குன்றும் வரை இதனை எழுதி வந்தார் கலைஞர் கருணாநிதி.

53. உடன் பிறப்பே என விளித்து கலைஞர் கருணாநிதி எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 7,000க்கும் மேல்.



54. `சங்கத்தமிழ்', `தொல்காப்பியஉரை', `இனியவை இருபது', `கலைஞரின் கவிதை மழை',உட்பட 150-க்கும் மேலான நூல்களை கலைஞர் கருணாநிதி எழுதியிருக்கிறார்.

55. உடன்பிறப்புகளுக்கு இவர் எழுதிய கடிதங்கள் தொகுக்கப்-பட்டு 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

56. முதல்வராக இருக்கும் போதும், இல்லாத போதும் அதிகாலையிலேயே பத்திரிக்கைகளைப் படித்து விட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு தொலைபேசியில் பேசுவது கலைஞர் கருணாநிதியின் வழக்கம்.



57. 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் தன் வாழ்க்கை வரலாற்றை முரசொலி மற்றும் குங்குமம் இதழில் எழுதினார் கலைஞர் கருணாநிதி.

58. ஒரு சினிமா வசன கர்த்தாவாக கலைஞர் கருணாநிதியை உச்சத்திற்கு கொண்டு சென்றது 'பராசக்தி' திரைப்படம் தான். இத்திரைப்படம் வசனத்திற்காகவே திரும்ப திரும்ப பார்க்கப்பட்டது.

59. கல்லக்குடி போராட்டம் தான் அவரை அரசியல் தளத்தில் முக்கிய தலைவராக பரிணமிக்க செய்தது. இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, கல்லக்குடியில் ரயில் தண்டவாளத்தில் தலைவைத்துப்படுத்து, ரயில் மறியலில் இறங்கினார்.




60. இந்தி என்பது உணவு விடுதியிலிருந்து எடுத்துச் செல்லும் உணவு ஆங்கிலம் என்பது ஒருவர் சொல்ல அதன்படி சமைக்கப்பட்ட உணவு தமிழ் என்பது குடும்பத் தேவையறிந்து, விருப்பமறிந்து, ஊட்டமளிக்கும் தாயிடமிருந்து பெறப்பட்ட உணவு" என்று அக்டோபர் 13, 1957 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பேசினார் கலைஞர் கருணாநிதி.

61. சென்னையின் மிகப் பிரபலமான ஜெமினி மேம்பாலம் எனப்படும் அண்ணா மேம்பாலம் கலைஞர் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் 21 மாதங்களில் கட்டப்பட்டு, 1973 ஜூலை 1ஆம் தேதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. அந்த






காலகட்டத்தில் நாட்டிலேயே இம்மாதிரி கட்டப்பட்ட மூன்றாவது பாலம் அது.

62. தன் மூளையே தனக்கு டைரி என்பார் கலைஞர் கருணாநிதி. அந்தளவுக்கு ஞாபகசக்தி கொண்டவர் அவர்.


63. சி.என். அண்ணாதுரையின் முதலாவது நினைவு நாளின் போது, மத்திய அரசு அவரது புகைப்படத்துடன் தபால் தலை வெளியிட விரும்பிய போது, அவரது கையெழுத்தையும் அந்தபுகைப்படத்தின் மீது இடம்பெறச் செய்தார் அப்போது முதல்வராக இருந்தார் கலைஞர் கருணாநிதி. "அப்போது தான் தமிழ் எழுத்துகள் அந்த தபால்தலையில் இருக்கும்" என்றார்.



64. மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை எழுதிய "நீராரும் கடலுடுத்த" பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு விழாக்களில் பாடும் வழக்கத்தை 1970ல் கலைஞர் கருணாநிதி ஏற்படுத்தினார். முதன் முதலாக திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்தப் பாடல் பாடப்பட்டது.

65. சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கருவூலத்தில், கலைஞர் கருணாநிதி குறித்த அனைத்து தகவல்களும் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

66. 1970ல் லண்டனில் கூட ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தி இருக்கிறார் கலைஞர் கருணாநிதி. பாரீசில் நடந்த மூன்றாவது



உலகத்தமிழ் மாநாட்டிற்குச் செல்லும் வழியில் இந்த செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது.

67. தமிழக முதலமைச்சர்களில் அதிக அளவில் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டவர் கலைஞர் கருணாநிதி. அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்.

68. எம்.ஜி.ஆருக்கு "புரட்சி நடிகர்" என்ற பட்டத்தைக் கொடுத்தது கலைஞர் கருணாநிதி தான்.

69. சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்திற்கு காரணகர்த்தாவாக இருந்தது கலைஞர் கருணாநிதிதான். ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான சென்னை




அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியதும் கலைஞர் கருணாநிதிதான்.

70. நாட்டிலேயே முதல்முறையாக 1997லேயே தகவல் தொழில் நுட்பத்துறைக்கென ஒரு கொள்கையை அறிவித்தது கலைஞர் கருணாநிதி தலைமையிலான அரசு தான். அந்தத் தருணத்தில் தரமணியில் கட்டப்பட்ட டைடல் பார்க், தமிழகத்தின் வளர்ச்சியில் பெரும்பாய்ச்சலையே நிகழ்த்தியது.

71. 1959ஆம் ஆண்டு நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் 100ல் 45 இடங்களைப் பிடித்தது தி.மு.க. இதற்காக மோதிரம் ஒன்றை கலைஞர் கருணாநிதிக்கு பரிசளித்தார் சி.என். அண்ணாத்துரை.



72. 1967ல் முதன் முதலில் சி.என். அண்ணாதுரை முதல்வரான போது, அண்ணா, நெடுஞ்செழியன் ஆகியோருக்குப் பிறகு அமைச்சரவையில் மூன்றாவது இடத்தில் பொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

73. நெருக்கடி நிலை கால கட்டத்தில் பத்திரிகைகளுக்கு தணிக்கைமுறை அமலில் இருந்ததால், கைது செய்யப்பட்ட தி.மு.கவினரின் பட்டியலை வெளியிட யுக்தி ஒன்றைக் கடைப்பிடித்தார் கலைஞர் கருணாநிதி. 1976 பிப்ரவரி 3ஆம் தேதி அண்ணா நினைவு நாளன்று அண்ணா சதுக்கத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியல் என்று ஒரு



பட்டியலை வெளியிட்டார். அதில் மாவட்ட வாரியாக கைது செய்யப்பட்டவர்களின் பெயர் இடம் பெற்றிருந்தது.

74. உடல் நலம் நன்றாக இருந்த வரை, காலை 4.30 மணிக்கு எழுந்து, எல்லாப் பத்திரிகைகளையும் படித்து விடும் பழக்கம் கொண்டவர் கலைஞர் கருணாநிதி. சில சமயங்களில் சம்பந்தப்பட்ட பத்திரிகை அலுவலகங்களுக்கும் அதிகாலையிலேயே அழைத்துப் பேசுவார்.

75. கலைஞர் கருணாநிதியை மிகவும் பாதித்த மரணங்களில் முரசொலிமாறனின் மரணம் முக்கியமானது. "அவனுக்கு முன்னாடி நான் போயிருக்கணும்" என்று கலைஞர் கருணாநிதி அடிக்கடி கூறுவதாக அவரது உதவியாளர் சண்முகநாதன் சொல்கிறார்.



76. கலைஞர் கருணாநிதியின் கோபாலபுரம் இல்லத்திற்கு யாரும் தொலைபேசியில் அழைத்து தகவல் பெற முடியும். தொலைபேசி ஒலித்தவுடன், "வணக்கம், தலைவர் இல்லம்" என்ற குரல் ஒலிக்கும்.

77. கலைஞர் கருணாநிதியின் கோபாலபுரம் இல்லம் வாங்கப்பட்டது 1955ல். சரபேஸ்வரய்யர் என்பவர் இந்த வீட்டை விற்றார்.

78. கலைஞர் கருணாநிதியின் வீட்டில் உள்ள தனிநூலகத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உண்டு.

79. தன்னுடைய கோபாலபுரம் இல்லம் தயாளு அம்மாளின் காலத்திற்குப் பிறகு மருத்துவமனையாக இயங்க வேண்டுமென்று



கூறி, அன்னை அஞ்சுகம் அறக்கட்டளைக்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

80. தன் வீட்டை ஒட்டியுள்ள வேணுகோபாலசுவாமி கோவிலுக்கு இதுவரை சென்றதில்லை என்கிறார் கலைஞர் கருணாநிதி.

81. தமிழ் ஆண்டு வரிசைக்கு திருவள்ளுவர் ஆண்டு என்ற பெயரை அளித்தவர் கலைஞர் கருணாநிதி தான்.

82. உடல்நலம் நன்றாக இருந்த கால கட்டத்தில் பெரும்பாலான நாட்களில் கட்சி அலுவலகத்திற்கு காலை, மாலை என இரு வேளையும் சென்று விடுவார் கலைஞர் கருணாநிதி.

83. 2018ல் தான் இந்தியாவின் அனைத்து கிராமங்களுக்கும் மின்இணைப்பு என்ற இலக்கு எட்டப்பட்டது. ஆனால்,



1969லேயே இதற்கான முயற்சிகளைத் துவங்கி, நாட்டிலேயே முதலிடம் வகித்தது தமிழ்நாடு.

84. பல காலகட்டங்களில் தேசிய அரசியலில் கலைஞர் கருணாநிதி செல்வாக்கு செலுத்தியிருந்தாலும் ஒரு போதும் நாடாளுமன்றத் தேர்தலில் கலைஞர் கருணாநிதி போட்டியிட்டதில்லை.

85. நேரம் தவறாமை கலைஞர் கருணாநிதியின் முக்கியப் பண்புகளில் ஒன்று. எந்த ஒரு நிகழ்வுக்கும் குறித்த நேரத்திற்கு முன்பே வந்துவிடுவார் கலைஞர் கருணாநிதி.

86. கலைஞர் கருணாநிதி செயல்படுத்திய திட்டங்களில் அவருக்கு மிகவும் பிடித்த திட்டங்களில் ஒன்று பெரியார் நினைவு



சமத்துவபுரத் திட்டம். 1998ல் மதுரை மாவட்டம் மேலக்கோட்டையில் முதல் சமத்துவபுரம் துவங்கப்பட்டது. 237 சமத்துவபுரங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டன. இதில் தலித்துகளுக்கு 40 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டன.

87. ராஜாஜியில் துவங்கி, டி.பிரகாசம், ஓ.பி. ராமசாமிரெட்டியார், பி.எஸ். குமாரசாமிராஜா, காமராஜர், பக்தவத்சலம், சி.என். அண்ணாதுரை, எம்.ஜி.ஆர் , ஜானகிராமச்சந்திரன், ஜெயலலிதா, ஓ. பன்னீர்செல்வம்என 11 முதல்வர்களின் ஆட்சிக்காலத்தில் அரசியல் செய்திருக்கிறார் கலைஞர் கருணாநிதி.

88. கலைஞர் கருணாநிதி தலைவராக இருந்த காலத்தில் இருமுறை கட்சியில் பெரும்பிளவு ஏற்பட்டது. முதல்முறை எம்.ஜி.ஆரால்.



இரண்டாவது முறை வைகோவால். இருமுறையும் கட்சியை மீட்டெடுத்தார் கலைஞர் கருணாநிதி.

89. உணவுப் பாதுகாப்பிற்காக, இந்திய உணவுக்கழகத்தைப் போல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கி வளர்த்தெடுத்தார் கலைஞர் கருணாநிதி.

90. விவசாயிகளுக்கு இல்வச மின்சாரம் வழங்கும் திட்டம் கலைஞர் கருணாநிதியால் கொண்டு வரப்பட்டது தான். அதேபோல் வீடுகளுக்கு இலவச வண்ணத்தொலைக்காட்சி பெட்டி வழங்கும் திட்டமும் கலைஞர் கருணாநிதியால் கொண்டு வரப்பட்டது

91. ஒரு முறை சட்டமன்றத்தில், மீன்வளத்துறை அமைச்சர் கே.பி.பி. சாமி பேச எழுந்த போது, அவரை சுருங்க பேச



சொல்வதற்காக, ' அயிரை மீன்அளவுக்குப் பேசவும்' என்று துண்டுசீட்டு எழுதி கொடுத்தார் கலைஞர் கருணாநிதி.

92. 2001-ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த அடுத்த மாதமே கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்டார். ஜூன் 30 - ஆம் தேதி நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட அந்த கைது தேசிய அளவில் பரபரப்பாக பேசப்பட்டது. மூத்த தலைவரை கண்ணியமாக நடத்தவில்லை என்று கண்டனங்களும் எழுந்தன.

93. எம்.ஜி.ஆர் ஆட்சியில், தமிழக சட்டசபை சபாநாயகராக க.ராஜாராம் இருந்தார். அப்போது ஒரு விவாதத்தின் போது, எதிர்க்கட்சியான தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து முழக்கமிடுகின்றனர். கூச்சலை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்




சபாநாயகர். ஆனால் கூச்சல் குறையவில்லை. "எப்படியோ போங்க. இனி உங்களை அந்த ஆண்டவன்தான் காப்பாத்தணும்" என்று கூறிவிட்டு அமைதியாகிவிட்டார் சபாநாயகர். அதன் பின் எழுந்த கலைஞர் கருணாநிதி "இவங்களை எல்லாம் ஆண்டவன்தான் காப்பாத்தணும்னு நீங்க சொன்னீங்க. அதான் நான் எல்லோரையும் அமைதிப்படுத்தினேன். ஏன்னா, இதற்கு முன்பு ஆண்டவன் (ஆட்சியில் இருந்தவன்) நான் தானே" என்கிறார். இதுபோன்ற பலநகைச்சுவையான தருணங்கள் அவரது சட்டமன்ற வரலாற்று பக்கத்தில் உள்ளது.

94. அரசியல் விமர்சனங்களை எள்ளலுடன் எதிர்கொள்ளக் கூடியவர் கலைஞர் கருணாநிதி. டாஸ்மாக் கடைகள் இயங்கும்




நேரத்தை ஒருமணி நேரம் குறைத்தது குறித்து கருத்து தெரிவித்து இருந்த பா.ம.க நிறுவனர் ராமதாஸ், "நான் கேட்டது அறுவைசிகிச்சை... கலைஞர் கருணாநிதி செய்ததோ முதலுதவி" என்று கூறி இருந்தார். இது தொடர்பாக பதில் அளித்த கலைஞர் கருணாநிதி, "அறுவை சிகிச்சைக்கு முன்னர் முதலுதவிதான் அவசியம். சாதாரணமாக எல்லாருக்கும் தெரிந்த விஷயம் மருத்துவம் படித்த மருத்துவருக்கு புரியாமல் இருப்பது ஆச்சர்யம்" என்றார்.

95."மனசாட்சி உறங்கும் சமயத்தில் தான் மனக்குரங்கு ஊர்சுற்றக் கிளம்புகிறது." - இது அவர்அடிக்கடி மேற்கோள் காட்டியவரி.



## கலைஞர்அவர்களின் நகைச்சுவை பதில்கள்

**கேள்வி:** அம்மையார் ஜெயலலிதா சென்னையில் அமர்ந்து கொண்டே காணொலிக் காட்சி மூலம் தமிழகமெங்கும் கட்டடங்களைத் திறந்து வைக்கிறாரே?

**கலைஞர்:** ஸ்ரீரங்கத்தில் இருந்து கொண்டு சொர்க்க வாசலைத் திறந்துவிட்டோம் என்கிறார்களே.. அது போல நினைத்துக் கொள்ள வேண்டியது தான்!

**கேள்வி:** செவ்வாயில் தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்களே?

**கலைஞர்:** செவ்வாயில் இருந்தால் அது உமிழ்நீர். தண்ணீர் அல்ல.



**கேள்வி:** கோழி முதலா, முட்டை முதலா?

**கலைஞர்:** முட்டை வியாபாரிகளுக்கு முட்டையும், கோழி வியாபாரிகளுக்கு கோழியும்தான் முதல் (Capital)

**கேள்வி:** மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா?

**கலைஞர்:** இந்த வயதில் அரசியல் என்பது அத்தை மகள் போல. பேசலாம். பழகலாம். சுற்றிச் சுற்றி வரலாம். ஆனால் தொட்டு மட்டும் விடக்கூடாது

**கேள்வி:** தலையில் முடி கொட்டியதைக் குறித்து எப்போதாவது வருந்தியிருக்கிறீர்களா?

**கலைஞர்:**இல்லை, அடிக்கடி முடிவெட்டிக் கொள்வதற்கு ஆகும் செலவு மிச்சமென்று மகிழ்ந்துதான் இருக்கிறேன்.




## கலைஞர்ஆரம்பித்ததிட்டங்கள்

1. போக்குவரத்துத்துறை என்ற துறையை உருவாக்கியது கலைஞர்.

2. போக்குவரத்தை தேசியமையமாக்கியது கலைஞர்.

3. மின்சாரம் அனைத்து கிராமங்களுக்கும் செல்ல வழித்தடம் அமைத்தது கலைஞர்.

4. 1500 பேரை கொண்ட கிராமங்களுக்கும் சாலை வழித்தடம் அமைத்தது கலைஞர்.

5. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைத்தது கலைஞர்.

6. குடிநீர் வடிகால் வாரியம் அமைத்தது கலைஞர்.

7. முதலில் இலவச கண் சிகிச்சைமுகாம் அமைத்தது கலைஞர்.

8. பிச்சைகாரர்கள் மறுவாழ்வு மையம் அமைத்தது கலைஞர்.

9. கையால் இழுக்கும் ரிக்ஷாவை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா கொடுத்தது கலைஞர்.

10. இலவச கான்கிரீட் வீடுகளை ஒடுக்கப்பட்டோருக்கு கொடுக்கும் திட்டம் வகுத்தது கலைஞர்.

11. குடியிருப்புச்சட்டம் (வாடகை நிர்ணயம் போன்றவை) கொண்டு வந்தது கலைஞர்.

12. இந்தியாவிலே முதன் முதலில் காவல்துறை ஆணையம் அமைத்தது கலைஞர்.

13. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கென துறை அமைத்தது கலைஞர்.

14. அரசியலமைப்பில் பிற்படுத்தபபட்டோருக்கான அமைப்பை அமைத்தது கலைஞர்.

15. அரசியலமைப்பில் BC - 31%, SC - 18 % ஆக இடஒதுக்கீட்டை உயர்த்தியது கலைஞர்.

16. P.U.C வரை இலவசக் கல்வி உருவாக்கியது கலைஞர்.

17. மே 1 சம்பளத்துடன் கூடிய பொதுவிடுமுறையாய் அறிவித்தது கலைஞர்.

18. வாழ்ந்த மனிதரான நபிகள்நாயகத்தின் பிறந்தநாளை விடுமுறையாய் அறிவித்தது கலைஞர்.

19. முதல் விவசாயக்கல்லூரியை (கோவை) உருவாக்கியது கலைஞர்.

20. அரசு ஊழியர்கள் குடும்பநல திட்டம் தந்தது கலைஞர்.

21. அரசு ஊழியர்கள் மேலான ரகசிய அறிக்கை முறையை ஒழித்தது கலைஞர்.

22. மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம் தந்தது கலைஞர்.

23. கோவில்களில் குழந்தைகளுக்கான "கருணை இல்லம்" தந்தது கலைஞர்.

24. சேலம் இரும்பு தொழிற்சாலை அமைத்தது கலைஞர்.







25. நிலவிற்பனை வரையரை சட்டம்அமைத்தது கலைஞர்.

26. இரண்டாம் அலகு நிலக்கரி மின்உற்பத்தி நெய்வேலியில் கொண்டு வந்தது கலைஞர்.

27. பெட்ரோல் மற்றும் ரசாயன தொழிற்சாலை தூத்துக்குடியில் கொண்டு வந்தது கலைஞர்.

28. SIDCOவை உருவாக்கியது கலைஞர்.

29. SIPCOTயை உருவாக்கியது கலைஞர்.

30. உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தப்பட்டோரில் தமிழ் இஸ்லாமியர்கள் போல் சேர்த்தது கலைஞர்.

31. பயனற்ற நிலத்தின் மீதான வரி நீக்கம் கொண்டு வந்தது கலைஞர்.

32. மனுநீதி திட்டம் தந்தது கலைஞர்.

33. பூம்புகார் கப்பல் நிறுவனம் தந்தது கலைஞர்.

34. பசுமை புரட்சிதிட்டம் தந்தது கலைஞர்.

35. கொங்குவேளாளர் இனத்தை பிற்படுத்தப்பட்டோரில் இணைத்தது கலைஞர்.

36. மிகவும்பிற்படுத்தப்பட்டோரில் வன்னியர், சீர்மரபினரை சேர்த்தது கலைஞர்.

37. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20% தனி இடஒதுக்கீடு தந்தது கலைஞர்.

38. தாழ்த்தப்பட்டோருக்கு 18% தனி இடஒதுக்கீடு தந்தது கலைஞர்.

39. பழங்குடியினருக்கு 1% தனி இடஒதுக்கீடு தந்தது கலைஞர்.

40. மிகவும் பிற்படுத்தபபட்டோருக்கு இலவசக் கல்வி தந்தது கலைஞர்.

41. வருமான உச்சவரம்புக்கு கீழ் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி தந்தது கலைஞர்.

42. தாழ்த்தப்பட்டோருக்கு இலவசக் கல்வி தந்தது கலைஞர்.

43. இந்தியாவிலே முதன்முறையாக விவசாயத்திற்க்கு இலவச மின்சாரம் தந்தது கலைஞர்.

44. சொத்தில் பெண்ணுக்கு சமஉரிமையை சட்டமாக்கியது கலைஞர்.

45. அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு தந்தது கலைஞர்.

46. ஆசியாவிலே முதன்முறையாக கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைக்கழகம் அமைத்தது கலைஞர்.

47. ஏழை பெண்களுக்கு திருமண நிதி உதவி திட்டம் தந்தது கலைஞர்.

48. விதவை பெண்கள் மறுமணநிதி உதவி திட்டம் தந்தது கலைஞர்.

49. நேரடி நெல் கொள்முதல் மையம் தந்தது கலைஞர்.

50. நெல் கொள்முதலில் ஊக்கத்தொகை மற்றும் விலை ஏற்றம் செய்தது கலைஞர்.

51. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அமைத்தது கலைஞர்.

52. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதிஉதவி திட்டம் தந்தது கலைஞர்.

53. பெண்கள் சுயஉதவி குழுக்கள் அமைத்தது கலைஞர்.

54. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நிறுவியது கலைஞர்.

55. பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம் நிறுவியது கலைஞர்.

56. டாக்டர் MGR மருத்துவக் கல்லூரி நிறுவியது கலைஞர்.

57. முதன் முதலில் காவிரிநதிநீர் மன்றம் அமைக்க முற்பட்டவர் கலைஞர்.



58. உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு தேர்தல் கொண்டு வந்தது கலைஞர்.

59. உள்ளாட்சி பதவிகளில் 33% பெண்களுக்கு இட ஒதுக்கீடு. தந்தது கலைஞர்.

60. இருபெண் மேயரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து வர செய்தது கலைஞர்.

61. மெட்ராஸ், சென்னையாக்கியது கலைஞர்.

62. முதல் தடவை விதவை பெண்களுக்கும் பொறியியல் மற்றும் மருத்துவ கல்லூரியில் இடம் அளித்தது கலைஞர்.

63. தொழிற்சாலைகளுக்கான வெளிப்படை கொள்கை அமைத்தது கலைஞர்.

64. முதல் தடவை விதவை பெண்கள் தொழில் தொடங்க உதவியவர் கலைஞர்.

65. கான்கிரீட் சாலை அமைத்தது கலைஞர்.

66. தொழில் முறை கல்வியில் கிராமபுற மாணவர்களுக்கு 15% இடஒதுக்கீடு செய்தது கலைஞர்.

67. அய்யன் திருவள்ளுவருக்கு சிலை வைத்தது கலைஞர்.

68. தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றுத் தந்தது கலைஞர்.

69. செம்மொழி மாநாடு நடத்தியது கலைஞர்.

70. சத்துணவில் கொண்டைக்கடலை, வாழைப்பழம் சேர்த்தது கலைஞர்.

71. பால்விலை, பேருந்து கட்டணம், மின்சாரக்கட்டணம் உயர்த்தி மக்களை துன்புறுத்தாதவர் கலைஞர்.

72. விவசாயக் கடனை அறவே தள்ளுபடி செய்து, விவசாய மக்களை காத்தவர் கலைஞர்.

73. நியாய விலைக் கடைகளில் மளிகைப் பொருட்கள் அனைத்தும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கச் செய்தவர் கலைஞர்.

74. ஈழத்தமிழர்க்காக இருமுறை ஆட்சி துறந்தவர் கலைஞர்.



கலைஞர் கருணாநிதி வாழ்க்கை குறிப்பு

**1924 ஜூன் 3:** நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளை என்ற சிற்றூரில் கருணாநிதி பிறந்தார். தந்தை பெயர் முத்துவேலர். தாயார் அஞ்சுகம்.

**1938**: நீதிக்கட்சியின் தலைவர்களின் பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு, மாணவ பருவத்திலேயே அரசியலில் ஈடுபாடு காட்ட ஆரம்பித்தார்.

**1941**: தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்ற அமைப்பை தொடங்கினார் கருணாநிதி.



**1944 செப்டம்பர்:** பத்மாவதி என்பவருடன் திருமணம் நடந்தது. மு.க. முத்து இவர்களின் மகன்.

**1948 செப்டம்பர்:** முதல் மனைவி மறைந்த நிலையில், தயாளு அம்மாளுடன் இரண்டாவது திருமணம். மு.க. அழகிரி, மு.க. தமிழரசு, மு.க. ஸ்டாலின், செல்வி ஆகியோர் இவர்களது பிள்ளைகள்.

**1949 செப்டம்பர் 17:** திராவிடர் கழகத்தலைவர் பெரியாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டையடுத்து, சி.என். அண்ணாதுரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்படுகிறது.



**1950**: கருணாநிதி கதை - வசனம் எழுதிய, எம்.ஜி.ஆர். நடித்த "மந்திரிகுமாரி" திரைப்படம் வெளியானது.

**1952**: கருணாநிதிக்கு புகழ் தேடித்தந்த, சிவாஜிகணேசனை திரையுலகுக்கு அறிமுகப்படுத்திய `பராசக்தி` படம்வெளியானது.

**1953 ஜுலை 14, 15**: "டால்மியா புரம்" என்ற பெயரைக் "கல்லக்குடி" என பெயர் மாற்றம் செய்ய வேண்டுமெனக்கோரியும், குலக்கல்வி திட்டத்துக்கு எதிர்ப்புதெரிவித்தும் திமுக போராட்டம் நடத்தியது. தண்ட வாளத்தில் படுத்து கருணாநிதி போராட்டம் நடத்தினார்.

**1957**: குளித்தலை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு, முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானார் மு. கருணாநிதி. இதற்குப் பிறகு போட்டியிட்ட எல்லா சட்டமன்ற தேர்தல்களிலும் அவர் வெற்றி பெற்றார்.

**1959**: சென்னை மாநகராட்சிக்கு நடந்த தேர்தலில் 100-க்கு 45 இடங்களில் வெற்றி பெற்ற திமுக, மாநகராட்சியைக் கைப்பற்றியது.

**1962**: தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவராக பதவியேற்றார் கருணாநிதி.

**1963**: திமுக நடத்திய அரசியல் சட்ட எரிப்பு போராட்டத்தில் பங்கேற்ற மு. கருணாநிதிக்கு 6 மாத கடுங்காவல் தண்டனைவழங்கப்பட்டது

**1965 பிப்ரவரி 16:** இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கருணாநிதி, தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். பிறகு ஏப்ரல் 15-ஆம் தேதி விடுதலையானார்.

**1967**: சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. கருணாநிதி பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.



**1969 பிப்ரவரி 10:** அண்ணாவின் மறைவுக்குப் பின், தமிழக முதலமைச்சராக முதன்முறையாகப் பதவியேற்றார் கருணாநிதி.

**1971 மார்ச் 15:** சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றார் கருணாநிதி.

**1972 அக்டோபர் 14:** திமுக-வில் இருந்து எம்.ஜி. ராமச்சந்திரன் நீக்கப்பட்டார்.

**1974 ஆகஸ்ட் 15:** மு. கருணாநிதியின் கோரிக்கையின் பேரில், முதலமைச்சர்களுக்கு தேசியக்கொடியை ஏற்றும் உரிமை

வழங்கப்பட்டது. புனித ஜார்ஜ் கோட்டையில் தேசிய கொடியை ஏற்றினார் கருணாநிதி.

**1976 ஜனவரி 31:** கருணாநிதி தலைமையிலான திமுக அரசு கலைக்கப்பட்டது.

**1986:** இலங்கை தமிழர் பிரச்சனைக்காக, ஈழத் தமிழர் ஆதரவு அமைப்பின் (டெசோ) மாநாட்டை நடத்தினார் கருணாநிதி.

**1988:** வி.பி. சிங்கை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்ட தேசிய முன்னணியில் இணைந்து, மத்திய கூட்டணி அரசில் திமுக இடம் பெற்றது.

**1989:** எம்.ஜி. ராமச்சந்திரன் மறைவுக்குப் பிறகு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று திமுக மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. 3-ஆவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றார் கருணாநிதி.

**1991 ஜனவரி 30:** திமுக ஆட்சி கலைக்கப்பட்டது.

**1996**: சட்டமன்ற தேர்தலில் வென்று, 4-ஆவது முறையாக தமிழக முதல்வராக கருணாநிதி பதவியேற்றார்.

**2001 ஜூன் 30**: 2001-இல் நடந்த சட்டமன்ற தேர்தலில் திமுக தோல்வியடைந்த நிலையில், நள்ளிரவில் கருணாநிதியைக் கைது செய்தது தமிழகக் காவல்துறை. நாடு முழுவதும் இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

**2006**: சட்டமன்ற தேர்தலில் 5-ஆவது முறையாக முதல்வராகப் பதவியேற்றார் கருணாநிதி.

**2008-2009**: இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் போது, இந்திய அரசுக்கு போதுமான அழுத்தத்தை அளிக்கவில்லை என கருணாநிதி மீது விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன.




சென்னை அரசினர் தோட்டத்தில் 450 கோடி ரூபாயில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள சட்டப்பேரவை மற்றும் தலைமைச்செயலக கட்டிடத்தின் முகப்பு தோற்றம்.

**2010 மார்ச்**: ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், புதிய தலைமைச் செயலகம் - சட்டமன்ற கட்டடத்தை, பிரதமர் மன்மோகன்சிங் திறந்து வைத்தார்.

**2010 ஜூன்**: உலக தமிழ்செம்மொழி மாநாட்டை கோயம்புத்தூரில் நடத்தினார் கருணாநிதி.

**2011**: சட்டமன்ற தேர்தலில் அதிமுகவிடம் ஆட்சியை பறிகொடுத்தது திமுக.

**2013:** தனக்குப் பிறகு, தனது அரசியல் வாரிசாக தனது மகனும் திமுக பொருளாளருமான மு.க. ஸ்டாலின் இருப்பார் என அறிவித்தார் கருணாநிதி.

**2014-16**: 2014ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தல், 2016ல் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் திமுக தோல்வியடைந்தது.

**2016 அக்டோபர் 25:** கருணாநிதியின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதாக திமுக உறுதிப்படுத்தியது.

**2016 டிசம்பர் 1:** உடல்நலக்குறைவால் காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். டிசம்பர் 7ஆம் தேதி மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார்.

**டிசம்பர் 15:** மூச்சுத்திணறல், நுரையீரல் தொற்றுக்காக காவேரி மருத்துவமனையில் மீண்டும் சேர்க்கப்பட்ட கருணாநிதிக்கு ட்ராக்யோஸ்டமி செய்யப்பட்டது.

**2017 டிசம்பர் 16:** ஓராண்டுக்கு பிறகு திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் சென்றார்.

**2018 ஜூலை 27** நள்ளிரவுக்கு பிறகு உடல் நலக்குறைவு காரணமாக காவேரி மருத்துவமனைக்கு கருணாநிதி அழைத்துச் செல்லப்பட்டார்.

**ஆகஸ்ட் 7**: காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மு.கருணாநிதி மாலை 6.10 மணியளவில் காலமானார்.





சாமர்த்திய பேச்சாளர்!

பச்சையப்பன் கல்லூரியிலே ஒரு இலக்கிய விழாவுக்கு தலைவர் கலைஞர் கருணாநிதி முக்கிய விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார் அது தேர்தல் சமயம்.

திமுக ஒரு அணியிலும், காங்கிரஸ் மற்றும் அதிமுக எதிரணியிலும் இருந்தன.

அரசியல் பேசக்கூடாது என்று தெளிவாக கூறி விட்டனர். இலக்கிய உரையை நிகழ்த்தி உரையின் இறுதிக்கு வந்த தலைவர் கலைஞர் கருணாநிதி, உரையை முடிக்கும் முன்பாக, "தேர்தல் வரவிருக்கிறது. இந்நிகழ்ச்சி முடிந்ததும் அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உணவருந்தி முடிந்ததும் அனைவரும் இலையை தூர போட்டுவிட்டு கையை கழுவி விடுங்கள்' " என்றார். அரங்கமே அதிர்ந்தது

அது தான் தலைவர் கலைஞர் கருணாநிதி



**கருப்புக் கண்ணாடியும், மஞ்சள் சால்வையும்**

மறைந்த திமுக தலைவரும், முன்னாள் தமிழக முதல்வருமான **கலைஞர்** கருணாநிதியின் அடையாளமாக கருதப்படுபவைகளில் கருப்புக் கண்ணாடியும், மஞ்சள் சால்வையும் அடங்கும்.

இவற்றை அவர் எப்போதிலிருந்து அணிய ஆரம்பித்தார், ஏன் அணிகிறார் என்பது போன்ற கேள்விகளுக்கு இந்த தொகுப்பு விடை அளிக்கும்.

**மஞ்சள் துண்டிற்கான காரணம்?**

கலைஞர் கருணாநிதி வழக்கமாக வெள்ளைத்துண்டு அணியும் வழக்கமுடையவர். 1994ஆம் ஆண்டுக்குப் பிறகே அவர் மஞ்சள் துண்டு அணிய ஆரம்பித்தார். 1994ஆம் ஆண்டில் அவருடைய

கன்னத்தில் சிறிய வீக்கம் ஏற்பட்டது. அவருடைய உமிழ்நீர்ச் சுரப்பியில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாகவே இது ஏற்பட்டது. ஆகவே அந்தப் பகுதியை கதகதப்பாக வைத்துக் கொள்ள சால்வை ஒன்றை அணிந்தால் நல்லது என மருத்துவர்கள் தெரிவித்தனர். அப்போது அவர் அணிந்த சால்வை மஞ்சள் நிறத்தில் இருந்தது.

அது அவருக்கு நன்றாக இருப்பதாகவும் தனி அடையாளத்தைப் போல இருப்பதாகவும் உறவினர்களும் நண்பர்களும் கூறவே அவர் அதனைத் தொடர்ந்து அணிய ஆரம்பித்தார்.

மூடநம்பிக்கையின் காரணமாக கலைஞர் கருணாநிதியின் இந்த வண்ணத்தில் துண்டை அணிவதாக கூறப்படுவது குறித்து பல பேட்டிகளில் கேள்வியெழுப்பப்பட்ட போது, இதைப் பற்றி ஓஷோ எழுதியதை கலைஞர் கருணாநிதி மேற்கொள்காட்டியிருக்கிறார். "தன்னியல் பை ஆள்பவர் எவரோ, ஒளியும் தெளிவும் உண்மையுமானவர் எவரோ - அவரே மஞ்சளாடை அணியலாம்". .

## அவர் கண்களில் என்ன பிரச்சனை? ஏன் கருப்புக் கண்ணாடி அணிகிறார்?

1953ஆம் வருடத்தில் பரமக்குடியிலிருந்து திரும்பி வரும் போது கலைஞர் கருணாநிதி வந்த கார் திருச்சிக்கு அருகில் ஒரு மைல் கல்லில் மோதி விபத்திற்குள்ளானது. அந்த விபத்தில் கலைஞர் கருணாநிதியின் இடதுகண்ணிற்குச் செல்லும் நரம்பு பாதிக்கப்பட்டது. 12 முறை அந்தக் கண்ணில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. பிறகு 1967ஆம் ஆண்டு செப்டம்பரில் மீண்டும் ஒரு கார் விபத்தில் கலைஞர் கருணாநிதி சிக்கிய போது, இடது கண் மேலும் பாதிக்கப்பட்டது. இதையடுத்து

அவருக்கு கண்ணில் தொடர் வலி நீடித்தது. 1971ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஜான்ஹாப் கின்ஸ் மருத்துவமனையில் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பிறகே கலைஞர் கருணாநிதியின் கண்ணாடி அணிய ஆரம்பித்தார். முழுவதுமாக கண்ணை மறைக்கும் படி கண்ணாடி அணிந்திருந்த கலைஞர் கருணாநிதி 2000த்தின் முதல் பத்தாண்டுகளின் முற்பகுதியில் கண்வெளியில் தெரியும் படியான கண்ணாடியை அணிய ஆரம்பித்தார்.



## குளித்தலை தொகுதி தேர்தல் பணி

எண்பது ஆண்டு பொது வாழ்வுக்கு சொந்தக்காரர், ஓய்வறியா உழைப்பாளி என்றெல்லாம் போற்றப்படும் கலைஞர் கருணாநிதி ஒரு போராட்ட வீரர். இதனை இந்த உலகுக்கு முதன் முதலில் அடையாளம் காட்டியது கல்லக்குடி. சட்டமன்றத்தில் அவர் 61 ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். இந்தப் பணியை தொடங்க தலைவாசலாய் அமைந்தது குளித்தலை. இந்த இரண்டுமே அப்போது திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதிகள். இப்போது குளித்தலை கரூர் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளது. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என அண்ணா எழுப்பிய கோஷம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவிக்

கொண்டிருந்த நேரம், திருச்சி மாவட்டம் கல்லக்குடியில் உள்ள டால்மியா சிமென்ட் நிறுவனம், அந்த பகுதிக்கு டால்மியாபுரம் என பெயர் வைத்திருந்தது, அதை அழித்து விட்டு கல்லக்குடி எனப் பெயர் சூட்டுவது என திமுக முடிவு செய்தது.

15.7.1953ல் இந்த போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்கு கலைஞர் கருணாநிதி தலைமை ஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. எந்த வன்முறையும் இல்லாமல், ரயில் நிலையத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் டால்மியாபுரம் எனும் பெயரை அழித்து விட்டு, கல்லக்குடி என அச்சடிக்கப்பட்ட காகிதத்தை அதில் ஒட்ட வேண்டும் என்பது தான் போராட்டத்தின் திட்டமாக இருந்தது. ஒரு வேளை ஒட்டவிடாமல் தடுத்தால், தடையை மீறி கைதாகி சிறை செல்ல வேண்டும். அப்போது தினமும் அந்த ரயில் நிலையத்திற்கு வந்து செல்லும் ரயில் காலை 9.50க்கு வந்தது. யாரும் எதிர்பார்க்காத நிலையில் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்துக்கொண்டார் கலைஞர் கருணாநிதி. அவருடன் மேலும் பல திமுகவினர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். டால்மியாபுரத்திற்கு கல்லக்குடி எனப் பெயர் மாற்றாவிட்டால், ரயிலை விடமாட்டோம் என உறுதியுடன் முழக்கமிட்டனர்.

ரயில் வரும் போது பயந்து போய் தண்டவாளத்தில் இருந்து எழுந்து போய் விடுவார்கள் என அதிகாரிகள் கருதினார். ஆனால் கலைஞர் கருணாநிதியோ அசையவில்லை. உயிர் போனால் போகட்டும். தமிழுக்காக உயிர் விடுகிறேன் என்று உறுதியுடன் படுத்திருந்தார். இதை அறிந்த அதிகாரிகள் கலைஞர் கருணாநிதி உள்பட 34பேரை கைது செய்து தண்டவாளத்தில் இருந்து அப்புறப்படுத்தினார்கள். இந்த வழக்கில் அரியலூர் வருவாய் கோர்ட்டில், கலைஞர் கருணாநிதிக்கு 5 மாதம் கடுங்காவல் சிறையும், ரூ.35 அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு வேளை ரயில் உங்கள் மீது ஏறியிருந்தால், என்ன ஆகியிருக்கும் என அவரிடம் கேட்டதற்கு, 'என் கழுத்தில் வழியும் ரத்தத்தை எடுத்து கல்லக்குடி என பெயர் பலகையில் அண்ணா எழுதியிருப்பார்' என கலைஞர் கருணாநிதி பதில் அளித்தார். கொள்கைக்காக உயிரையும் துச்சமெனமதித்தவர் கலைஞர் கருணாநிதி. இந்த உறுதியும், கொள்கையும் தான் கலைஞர் கருணாநிதியை ஒரு மாபெரும் போராளியாக முன்னிலைப்படுத்தியது.

திமுக தேர்தலில் போட்டியிடுவது என முடிவு செய்யப்பட்ட பின் 1957ல் பொதுத்தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் கலைஞர் கருணாநிதி, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் நாகை தொகுதியில் போட்டியிட விரும்பினார். அது கிடைக்காவிட்டால் தஞ்சை மாவட்டத்தில் ஏதாவது ஒரு தொகுதி கிடைக்கும் என கருதினார். ஆனால் அவருக்கு ஒதுக்கபட்டதோ திருச்சி மாவட்டத்தில் உள்ள குளித்தலை. குளித்தலை தொகுதி நிலச் சுவான்தார்கள், பண்ணையார்கள் பிடியில் இருந்தது. இவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ் அனுதாபிகளாகவே இருந்தனர். காங்கிரஸ் கோட்டையாக இருந்த குளித்தலையில் கலைஞர் கருணாநிதி தனது பேச்சாற்றல், கடும் உழைப்பால் வெற்றி பெற்றார். அப்போது அவரோடு ஒருங்கிணைந்து கலைஞர் கருணாநிதிக்காக தேர்தல் பணியாற்றியவர்களில் ஒருவர் கவுண்டம்பட்டி முத்து (92).1957ல் கலைஞர் கருணாநிதியுடன் சேர்ந்து குளித்தலை தொகுதியில் தேர்தல் பணியாற்றியதை அவர் நினைவு கூர்ந்தார்.

அவர் கூறியதாவது: கலைஞர் கருணாநிதி குளித்தலையில் போட்டியிட்ட போது, திருச்சி மாவட்ட திமுக செயலாளராக இருந்தவர் அன்பில் தர்மலிங்கம். அவர் குளித்தலை தொகுதியில் பல நாட்கள் முகாமிட்டு தேர்தல் பணியாற்றினார். மற்ற தொகுதிகளைப் போல குளித்தலை வெற்றி எளிதாக கிடைக்கவில்லை. குளித்தலை பண்ணையார்கள் ஆதிக்கம் நிறைந்த தொகுதி. குறிப்பாக நங்கவரம் நிலச் சுவான்தார்கள் பிடியில் தான் குளித்தலை தொகுதியின் பெரும்பகுதி இருந்தது. அவர்களிடம் வேலை செய்யும் விவசாயிகள், பண்ணையார்களை பார்த்து விட்டால் சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்க வேண்டும். அவர்கள் எழும்ப சொன்னால் தான் எழும்ப வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் நம்மை கடந்து சென்றுவிட்டார்களா? என பார்த்து தான் எழும்ப வேண்டும். இந்த கொடுமைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், திமுகவுக்கு வாக்களிக்க விரும்பினாலும், அதை செயல்படவிடாமல் தடுப்பதில் பண்ணையார்கள் கெடுபிடி காட்டினர். இதற்கு காரணம் திமுக பண்ணையார்களுக்கு எதிராக

போராட்டங்களை நடத்தியது தான். இந்த போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் கலைஞர் கருணாநிதி தான். அவர் நங்கவரம் வந்து போராட்டத்தை நடத்தியது பண்ணையார்களை ஆத்திர மூட்ட செய்திருந்தது. தங்கள் ஆதிக்கத்தை ஒழித்து விடுவார் என பண்ணையார்கள் கருதி இருந்தனர். இதற்கு காரணம் கலைஞர் கருணாநிதியின் பேச்சாற்றால், விடாமுயற்சி, கடினமான உழைப்பு. அவர் தெருத்தெருவாக வந்து விவசாயிகளுக்கு ஆதரவாக பேசி அவர்களை தன்பக்கம் இழுத்தார். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்த போராட்டம் நடத்தப்பட்டது. விவசாயிகளுக்கு நில உரிமை கிடைக்காவிட்டால் நங்கவரத்தில் திமுக போராட்டம் நடத்தும் என்று அறிவித்த அண்ணா அதற்காக கலைஞர் கருணாநிதியை அனுப்பி வைத்தார்.

இதற்காக கலைஞர் கருணாநிதி ரயில் மூலம் திருச்சியில் இருந்து பெருகமணி வந்தார். அவரை ரயில் நிலையத்தில் இருந்து சைக்கிளில் தான் அழைத்து சென்றோம். கலைஞர் கருணாநிதியின் பேச்சை கேட்க கிராமங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது. இதனால் பண்ணையார்களால் கலைஞர் கருணாநிதிக்கு ஆபத்து

ஏற்படலாம் என்று கருதிய போலீசார், ஆயுதப்படை போலீஸ்பாதுகாப்பு போட்டிருந்தது. நங்கவரம் வீதிகளில் கலைஞர் கருணாநிதி பேசிய பேச்சு அத்தனை விவசாயிகளையும் தட்டி எழுப்பியது. எத்தனை காலம் இப்படி அடிமையாக இருப்பது என அவர்கள் உரிமைக்குரல் எழுப்ப தொடங்கினர். அதன் பிறகே பண்ணையார்கள் இறங்கி வந்தனர். அவரவர் உழுத நிலம் அவரவருக்கே என்ற திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு அவர்கள் உழுதநிலம் கிரையத்தின் மூலம் சொந்தமாக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தத்தில் கலைஞர் கருணாநிதி, அன்பில் தர்மலிங்கம், அப்போதைய கலெக்டர் மலையப்பன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

தேர்தலின் போது நான் கலைஞர் கருணாநிதியுடன் 15 நாட்கள் இரவு பகலாக பணியாற்றி இருப்பேன். இதனால் அவருடன் எனக்கு நெருக்கம் ஏற்பட்டது. அவர் மனிதர்களை நேசிப்பவர், சாதி, மதம் பார்க்கமாட்டார். ஏழைகள் வீட்டில் என்ன உணவு கிடைக்கிறதோ அதை சாப்பிட்டுக்கொள்வார். கம்பங்கூழ் விரும்பி சாப்பிடுவார். நமது பேச்சைக் கொண்டே நம்மை எடை

போட்டுவிடுவார். வீடுவீடாக சென்று ஓட்டு கேட்போம். அப்போது இந்த வீட்டில் நமக்கு தான் ஓட்டுபோடுவார்கள் என்பதை உறுதியாகச் சொல்லிவிடுவார். இப்போது போல பிரசாரத்துக்கு கட்டுப்பாடு அப்போது இல்லை. விடிய விடிய ஓட்டு கேட்க செல்வோம். விளக்கு வசதி இல்லாத நேரம். அரிக்கேன் விளக்கை எடுத்து செல்வோம்.

அரிக்கேன் விளக்கை கலைஞர் கருணாநிதி முகத்துக்கு நேராக காட்டி, இவர் தான் நமது வேட்பாளர். உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என அறிமுகம் செய்து குக்கிராமங்களில் ஓட்டு சேகரித்தோம். குளித்தலையில் பெற்ற முதல் வெற்றி மூலம் சட்டசபையில் அடியெடுத்து வைத்த கலைஞர் கருணாநிதி அதன்பிறகு தொடர்ந்து வெற்றிகளை பெற்று சட்டசபையில் புதிய அத்தியாயம் படைத்தார். அதை நினைக்கும் போது எனக்கும் பெருமையாக இருக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.



வரலாற்றின் ஒவ்வொறு பக்கத்திலும் வாழும் கலைஞர்!

குடிசை மாற்று வாரியம் என்பது குடிசையில் வாழும் மக்களை நகரத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காக உருவானதல்ல. சென்னையை கட்டி எழுப்பிய உழைக்கின்ற மக்களுக்கு அவர்கள் வாழ்கின்ற பகுதியிலேயே அடுக்கு மாடிகுடியிருப்பு கட்டி அதில் அவர்களை குடியமர்த்துவது. அதுதான் கலைஞர் உருவாக்கிய குடிசை மாற்று வாரியம்.

உழைக்கின்ற மக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்து திட்டங்களை அறிவிப்பதிலே மிகுந்த அக்கரை காட்டியவர்.

தமிழை ஒரு பாடமாக படிக்காமலேயே தமிழ்நாட்டில் ஒருவர் பள்ளிப்படிப்பை முடிக்கலாம் என்று இருந்த இழிநிலையை

போக்கிட, ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களும் தமிழை முதல் மொழியாக, கட்டாய மொழிப் பாடமாக பயில வேண்டும் என்ற சட்டத்தை இயற்றி நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் ஒன்றாக இருந்த போதிலும் வெவ்வேறு பெயருடனும், வெவ்வேறு தேர்வுகளாகவும் இருந்த காரணத்தால் குறிப்பிட்ட பாடத்திட்ட மாணவர் மனதில் உயர்வு மனப்பான்மையும் மற்ற மாணவர் மனதில் தாழ்வு மனப்பான்மையும் உருவாகுதல் தவறு. குழந்தைப் பருவத்தில் இவ்வாறான மனப்பான்மை வளர்வது எதிர்கால சமூகத்திற்கு நல்லதல்ல என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசின் அங்கீகாரத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளி மாணவருக்கும் பொதுவான ஒருபாடத் திட்டம், பத்தாம் வகுப்பு இறுதியில்

ஒரேதேர்வு என்ற 'சமச்சீர்க் கல்வி" யை நடைமுறைக்கு கொண்டு வந்தார். தமிழகக் கல்வி வரலாற்றில் இது ஒரு மைல் கல்.
முக்கிய பிரச்சனைகளில் துறை சார்ந்த பல்வேறு தரப்பினர் தரும் அறிக்கைகளை உன்னிப்பாக கவனித்து, பலவற்றை ஆராய்ந்து அதன்பின் தன் கருத்தை மேலும் வலுவாக சொல்லும் பழக்கம் கொண்டவர். அவ்வாறு அவர் தரும் அறிக்கையில் யார் யார் என்ன சொன்னார்கள் என்பதை வரிசைப்படுத்தி அதில் தேவையான வரிகளை மேற்கோள்காட்டி அவ்வரிகளுக்குரியவர்களின் பெயரை தன் அறிக்கையில் குறிப்பிடும் நேர்மை கலைஞருக்கே உரியது.

வரலாற்றின் எந்த பக்கத்திலும் இவர் பெயர் இல்லாமல் போவதற்கு வாய்ப்பில்லை என்ற அளவிற்கு தன் உழைப்பால் உயர்ந்து நின்றவர்.

இந்திய சமூகம் இன்று எதிர்கொண்டுள்ள சிக்கல்களுக்கு தீர்வு காண முன்பைவிட இன்று அதிகம் தேவைப்படுகிறார். இன்னும் கொஞ்சம் பேசமாட்டாரா என நினைக்கின்ற போது முடிக்கப்படும் பேச்சுதான் சிறந்த உரைக்கான இலக்கணம் என்பார்கள். இன்னும் நம்முடன் வாழ்ந்து தொடர்ந்து வழிகாட்ட மாட்டாரா என ஏங்கும் நேரத்தில் மறைந்துள்ளார்.



**கலைஞர் ஒரு காவியம்**

அஞ்சுகத்தாய் வயிற்றில்,

முத்தானவன்.

மூதறிஞர் தமிழருக்கு,

சொத்தானவன்.

12-ஆம் வகுப்பு கூட,

எட்டாதவன்!!

நூறு நோபல் பரிசுக்கு

ஈடானவன்.

தமிழுக்காக தண்டவாளத்தில்

தலைவைத்தவன்.

தமிழருக்காக சிறைச்சாலை -பல

கண்டவன்.

பராசக்தியை -என்றும்

நம்பாதவன்.

பராசக்தியால் திரையுலகை,

வென்றானிவன்.

இவன் வசனத்தில் -என்றும்

தீப்பறக்கும்!!

மேடையில் சிங்கம் கர்ஜிக்கும்!!

அடுக்கு மொழியை அண்ணாவிடம்

வாங்கியவன்.

அவர் மோதிரத்தை கையில்

தாங்கியவன்.

மொழி;

இனம்;

பண்பாடு;

இவன்மூச்சி;

13 வயது முதல் தொடர்ந்திடுச்சி...

கம்பன் இலக்கிய,

மன்னன்.

கரிகாலன் தமிழ் அரசியல்

மன்னன்.

இவனோ இருவருக்கும்

மாமன்னன்.

இலக்கியம் என்றால்
எழுத்தாணி பேசும்.
அரசியல் என்றால்
ராஜதந்திரம் வீசும்.
எத்தனையோ களங்கள்
கண்டவன்.
தமிழர் மனங்களில்,
நின்றவன்.

உடன்பிறப்பே -என்று,
சொன்னவன்.
உழைப்பதற்கே பூமிக்கு
வந்தவன்.

நிலவை இழுத்து,
இலக்கியம் படைப்பான்.
சூரியனை ஜனித்து,
வசனம் தொடுப்பான்.

உன்னை மேடையில்
நின்று,
வென்றவர் இல்லை.
எத்துனை மேடைகள்,
எண்ணிக்கை இல்லை.

உன்னைப் பேசாத
நாளிதழ் இல்லை,
நாளுமில்லை.

புறநானூறுக்கு - நீ
தீட்டினாய் ஓவியம்.
போர்
முரசடிக்கும் தமிழ்
காவியம்.
எதைச்சொல்லி
உன்னைபாட;

- மொழி ஞானத்தை பாடவா,
- கலை ஞானத்தை பாடவா,
- மொழி காத்ததை பாடவா,
- அரசியல் சாணக்கியத்தை பாடவா,
ஒன்றுக்குள் ஒன்றை மிஞ்சியவன்,
மஞ்சள் துண்டை
தோளில் தாங்கியவன்
உனக்கும் வாழ்வில்
கரை உண்டு.
கடலுக்கும் கூட
கரை உண்டு.

அது
சூரியனில் படிந்த கருப் பென்பேன்!!
இலங்கையால் விழுந்த இழுக்கொன்று
கடலில் விழுந்த விசமென்று
கருதும் ஞானம் எனக்குண்டு.

நீ
நூறு பாரதிக்கு ஈடு,
பெரியார் போட்ட கோடு
அண்ணா கொடுத்த பேரேடு,
அதனால்
உனக்கு இல்லை
உலகில் ஈடு.




**கிடைத்தற்கரிய வாய்ப்பு**

கலைஞர் நமக்கு கிடைத்தற்கரிய வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும்... ஒரு பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும் நடந்து வருவதன் மூலம் தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவராகிறார் நமது கலைஞர்.

- பெரியார்



**'கருணாநிதிக்கு ஈடு கருணாநிதி தான்'**

என்னை முழுவதும் அறிந்தவர்கள் தான் கழகத்திலே இருக்கிறார்கள். அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத் தக்கவர்களிலே கருணாநிதிக்கு மிகச்சிறந்த இடம் உண்டு. கருணாநிதிக்கு ஈடு கருணாநிதி தான்!

- அண்ணா




'நாடு உயர்கிறது'

சிலருக்கு பதவி கிடைத்தால் நாடு குட்டி சுவராகிவிடுகிறது. நமது கலைஞருக்கு பதவி கிடைத்தாலோ நாடு உயர்கிறது.

- எம்.ஜி.ஆர்



**'என்ன பேசுவேன்?'**

என் அருமை நண்பனைப் பற்றி நான் என்ன பேசுவது? கலைஞரைப் பற்றி பேசினால், நானும் அதில் சேர்ந்திருப்பேனே? அப்படியென்றால் என்னை நானே புகழ்ந்து கொள்வதாகிவிடுமே, அதைப் பற்றி பேசுவதா? இருவரும் சிறு பிள்ளைகளாகத் தஞ்சை மாநகரிலே சந்தோஷமாக சுற்றித்திரிந்தோமே அதைப் பற்றி பேசுவதா? திமுகவுக்கு நிதிதிரட்டுவதற்காக ஊர் ஊராக தெருத் தெருவாக நாடகம் போட்டோமே, அதைப் பற்றிப் பேசுவதா? சினிமாவுக்கு வந்த பிறகு 'பராசக்தி'யில் அவருடைய வசனத்தில் பேசி நடித்தேனே, அதைப்பற்றி பேசுவதா? அந்தப்படம் வந்த ஒரே நாளில் புகழ்வானத்தில் பறந்தேனே, அதைப்பற்றி பேசுவதா?

- சிவாஜிகணேசன்



'கவர்ச்சியுள்ளவர்'

என்னதான் கருணாநிதியை நீங்கள் ஆத்திரமாகத் திட்டுங்கள். நேருக்கு நேர் சந்தித்தால் எந்தப் பெரிய மனிதரும் அவரிடம் சரணாகதி அடைந்து விடுவார்கள். இந்திய அரசியலில் அந்தக் கவர்ச்சி உள்ளவர்களில் கலைஞரும் ஒருவர்.

- கண்ணதாசன்




'கடவுளுக்கு பிடிக்கும்'

சிலருக்குக் கடவுளைப் பிடிக்காது. ஆனால், கடவுளுக்கு அவர்களைப் பிடிக்கும். கலைஞர்அப்படித்தான்!

- ரஜினிகாந்த்



'கேட்பாஸ்'

நான் நடிக்க வந்த காலத்தில் கலைஞர் வசனத்தை அழகாகப் பேசிக்காட்டுவது தான் நடிப்பிற்கான கேட்பாஸ்.

- கமல்ஹாசன்



**'ஆன்மிக கலைஞர்'**

தனக்கு கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும், ஆன்மிகம் சார்ந்த விஷயங்களில் ஆன்மிக வாதிகள் என்ன கருத்து சொல்கிறார்களோ அதை அப்படியே ஏற்றுக்கொள்பவர் கலைஞர்.

- குன்றக்குடிஅடிகளார்



**ஒரே ஒரு முறை, இப்போது ‘அப்பா’**
**என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே?**

எங்கு சென்றாலும் சொல்லிவிட்டு செல்லும்
எனது ஆருயிர்த் தலைவரே; இம்முறை
ஏன் சொல்லாமல் சென்றீர்கள்?

என் உணர்வில், உடலில், இரத்தத்தில்,
சிந்தனையில், இதயத்தில், இரண்டறக்கலந்து விட்ட
தலைவா! எங்களையெல்லாம், இங்கேயே

ஏங்கவிட்டு எங்கே சென்றீர்கள்?

“ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ
ஓய்வு கொண்டிருக்கிறான்” என்று உங்கள்
நினைவிடத்தில் எழுத வேண்டுமென்று
33 ஆண்டுகளுக்கு முன்பே எழுதினீர்கள்.

இந்தத் தமிழ் சமூகத்துக்காக
இடையறாது உழைத்தது போதும் என்ற மனநிறைவுடன்
புறப்பட்டு விட்டீர்களா?

95 வயதில், 80 ஆண்டு பொது வாழ்வுடன்
சளைக்காமல் ஓடி, ‘நாம் தாண்டிய உயரத்தை
யார் தாண்டுவார்கள் பார்ப்போம்’என்று போட்டி
வைத்துவிட்டு மறைந்து காத்திருக்கிறீர்களா?

திருவாரூர் மண்ணில் உங்கள் 95வது பிறந்தநாளாம்
சூன் 3ஆம் நாள் நான் பேசும் போது, ‘உங்கள்
சக்தியில் பாதியைத் தாருங்கள்’என்றேன். அந்தச் சக்தியையும்
பேரறிஞர் அண்ணாவிடம் நீங்கள் இரவலாகப் பெற்ற
இதயத்தையும் யாசிக்கிறேன்;
தருவீர்களா தலைவரே!
அந்தக் கொடையோடு, இன்னும் நிறைவேறாத
உங்கள் கனவுகளையும், லட்சியங்களையும்,
வென்று காட்டுவோம்!

கோடானு கோடி உடன் பிறப்புக்கள் இதயத்திலிருந்து
ஒரு வேண்டுகோள்... ஒரே ஒரு முறை...

"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!" என்று
சொல்லுங்கள் தலைவரே! அது ஒரு
நூற்றாண்டு எங்களை இனமொழி உணர்வோடு
இயங்க வைத்திடுமே!

"அப்பா அப்பா"என்பதைவிட, "தலைவரே தலைவரே"
என நான் உச்சரித்தது தான் என் வாழ்நாளில் அதிகம்.
அதனால் ஒரே ஒரு முறை, இப்போது 'அப்பா'
என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே?

- கண்ணீருடன் மு.க.ஸ்டாலின்



நான் இறந்தால் எனக்கு யார் இரங்கல் கவிதை எழுதுவது நண்பா?

-பேராசிரியர்க. அன்பழகன்



**தமிழினத்தின் உயிர் எழுத்தே!**

அஞ்சுகத்து மைந்தனே...

ஆர்ப்பரித்த சூரியனே...

இயற்கையை எதிர்க்க...

ஈடு இணை இங்கில்லை...

உயிரினும் மேலான உடன்பிறப்புகளை...

ஊமையராய் ஆக்கிவிட்டு...

எழுச்சி நாயகனே...

ஏன் இந்த மௌனப்படுக்கை...

ஐயா உன் சாதனையை...

ஒருவரும் செய்ய இயலா...

ஓங்கி ஒலிக்கும் உன் குரலே...

ஔடதமாம் தமிழனுக்கு...

இனி எங்கு கேட்பேன் என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே என்ற சிம்மக்குரலை



**தமிழ்தாயின் மூத்தமகன்**

திராவிடத்தின் இமயமலை போன்ற தலைவர்,
20ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட தலைவர்,
முற்போக்கு சிந்தனையாளர்,
விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தவர், ஏழைகளுக்கு குடிசை மாற்று வாரியம் அமைத்தவர், மகளிர் சுயஉதவி குழு அமைத்தவர், அனைத்து மக்களும் அர்ச்சகர் ஆகலாம் என சட்டம் போட்டவர், பெண்களுக்கு சொத்தில் பங்கு கொடுக்க சட்டம் போட்டவர், சமத்துவபுரம் அமைத்தவர், மினிபஸ்தந்தவர், ஏழை மகளிர் திருமண உதவிதொகை கொடுத்தவர், கைம்பெண் உதவிதொகை கொடுத்தவர், இலவச டிவி கொடுத்தவர், ஏழைகளின் தலைவர்,
பெரியாரின் மாணவர், பேரறிஞர் அண்ணாவின் தம்பி,
டாக்டர் கலைஞர் கருணாநிதி இயற்கை அடைந்தார் என்பது திராவிடத்தின் ஓர் சகாப்தம் முடிந்தது
வாழ்க கலைஞர்!!
வாழ்க கலைஞர் புகழ்!!



**போய்வா தலைவனே...**

நீ வாழ்ந்த காலத்தில்
நானும் வாழ்ந்திருக்கிறேன்
என்பதும் உன் கரம்பிடித்து அருகில் நின்றிருக்கிறேன் என்பதும்
என் வரலாறு நெடுகிலும் பெருமையானது....
நீ
விருப்பப் பட்டபடியே
உன் அண்ணனின் அருகிலேயே
உன்னை விதைத்திருக்கிறோம்...
இனியாவது ஓய்வாக
உன் அண்ணனோடு உனக்கு விருப்பமானதை உரையாடி
மகிழ்வாய் தலைவனே....
காவலன் இல்லையென எவனும் இத்தாய்நிலத்தில் நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்ள நாங்கள் இருக்கிறோம் மன்னவனே..
நீ நிறைவாய் போய் வா...



**"திரு நங்கை"**

அலி என்ற அபத்தமான சொல்லை

அகராதியை விட்டே அழித்து...

அதற்கு மாற்றாய் அங்கீகாரமாய்,

சமூக மாற்றமாய்,

**"திருநங்கை"** என

திருத்திய திருவள்ளுவரே!!!

நீர் மறைந்தாலும்

உம் புகழ் மறையாது!




போராளி!

இருந்த போதும்

இறந்த போதும்

போராடுகிறார் கலைஞர்

இடஒதுக்கீடுக்காக!




செம்மொழி நாயகரே!

உதயசூரியனாய் வாழ்வைத் தொடங்கி உச்சத்தைத் தொட்டவரே!

உச்சரிக்கும் தமிழை செம்மொழியாக்கியவரே! நாட்டைச் செம்மைப்படுத்த “அரிவாள்" தேவையில்லை, “அறிவுவாள்" ஒன்றே போதுமானது, என்பதை உலகிற்கு உணர்த்திய உத்தமத்தலைவரே!
உங்கள் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. தினம்தினம் உதிக்கும் சூரியனில் உங்களைக் காண்போம் அய்யா!

கண்ணீருடன் இதய அஞ்சலி.



போய் வா…

ஓய்வில்லாமல்

ஓடிய தலைவனே!

மீளா ஓய்விற்குள் சென்றுவிட்டாய்!

உன் உடல் மறைந்தாலும்

உன் புகழ் மறையாது!

போய் வா….



**தலைவனில்லாத் தனி நாடு!**

பேரறிஞர் அண்ணாவின்

பெருமைக்குரிய தம்பி நீ!

கோடித் தொண்டர்களின்

கொண்டாடும் அண்ணன் நீ!

ஐந்து முறை முதல்வரான

ஐம்பெருங் காப்பியம் நீ!

அரசியல் தோல்வி காணா

அரிச்சுவடி நீ!

நீ இல்லாத் தமிழ்நாடு

தலைவனில்லாத் தனிநாடு...

தமிழிருக்கும் நாள் வரை

தலைவா!

உன் பெயரிருக்கும்...

சென்றுவா தலைவா!!



**மறுமையில் திரும்பி வா! தலைவா!**

உறவாய், உற்றவனாய், உடன்பிறப்பாய்

எத்தனை பரிணாமம் நீர் கொண்டீர்!

உங்கள் இறப்பை ஏற்கிறோம்

இழப்பை அல்ல...

உங்கள் பயணம் ஏற்கிறோம்

பிரிவை அல்ல...

தமிழ் உள்ள வரை

தரணி உங்களை மறவாது…

ஆதலால் …

கல்லறையில் துயில் கொள்வீர் …

மறுமையில் திரும்பிடுவீர் …

என்றும் உங்கள் பிரிவில் வாடும் …

உங்கள் உடன்பிறப்புகள்…



**கலைஞர் உருவாக்கிய சென்னை**

இந்த பக்கம் போனால் வள்ளுவர் கோட்டம், அந்தபக்கம் போனால் அண்ணா மேம்பாலம், இப்படி போனால் கத்திப்பாரா மேம்பாலம், அப்படி போனால் புதிய தலைமை செயலகம், அங்கன போனால் அண்ணா நூற்றாண்டு நூலகம், இங்கன போனால் டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி, அங்கிட்டு போனால் கோயம்பேடு பஸ்ஸ்டாண்ட், இங்கிட்டு போனால் எம்.ஜி.ஆர். மெடிக்கல் யுனிவர் சிட்டி, அப்பிடிக்கா போனால் சிப்காட் தொழிற்சாலைகள், இப்பிடிக்கா போனால் சிட்கோ தொழிற்பேட்டைகள், கொஞ்சம் கீழிறங்கி போனால் தேசிய சித்தமருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கொஞ்சம் மேலேறிபோனால் மெட்ரோ ரயில் தடங்கள், அந்த ஓரம் போனால் எண்ணூர் அனல் மின்நிலையம், இந்த ஓரம் போனால் டைடல் பார்க்..

இப்படி, அப்படி எப்படி போனாலும்
இந்தப் பக்கம், அந்தப் பக்கம் எந்தப் பக்கம் போனாலும்
சென்னை பூராவும் அவர் உருவாக்கின இடங்கள் தான்

அவருக்கு சென்னை மெரினாவில் இடம் இல்லைன்னு சொல்ல நீங்கயாருடா?



மெரினா!

நின்ற

தொகுதியில்

எல்லாம் வென்றாய்...

படுத்துக் கொண்டே...

வென்ற தொகுதி

மெரினா!



வென்றார் கலைஞர்!

விதையிட்ட குருமூர்த்தி
வழி மொழிந்த கிரிஜா
வாதாடிய வைத்தியநாதன்...

ஆட்டம் போட்ட
ஆரியநரிகளின்
வால் அறுந்தது...

சேப்பாக்கம் தொகுதியில்
பலமுறை வென்றவர் கலைஞர்...

அங்கேதான் மெரினா உள்ளது.
மீண்டும் வென்றிருக்கிறார்!



**முதல்வன் நீ!**

முதல்வனாகித் தான்

இறப்பாய்

என்று சொல்லாத சோதிடன் இல்லை -உன்

முடிவிலும்

மூட நம்பிக்கைக்கு

முடிவு கட்டிய

"முதல்வன் நீ"



உதயசூரியன்!

அந்தி நேரமானால்

ஆதவன் மறைவது

இயல்பு தான்...

ஆனால்..

முத்தமிழ் வானில்

நீதான் என்றும்

உதயசூரியன்....!



**போராடினால் தான் வெற்றி!**

எதற்கெடுத்தாலும் போராட்டம்னா

தமிழ்நாடே சுடுகாடாயிடும்னு


யாரும் சொல்லாதிங்கடா இனிமேல்...

இங்க சுடுகாடே

போராடுனாத்தான் கிடைக்கும்னு

பதில் சொல்லிட்டு போயிருக்கிறார்

தலைவர் கலைஞர்!


கழக சூரியன்!
2018

## சென்று வா சூரியனே...

உதிரமெல்லாம் உணர்ச்சி ததும்ப, மொழியுரிமை இன உரிமை மீட்டுக் கொடுத்த ஒரு சகாப்தத்தை எண்ணி எண்ணி விழிக்குளங்களை உடைத்து வீறிட்டுப் பாயும் கண்ணீர்த்துளிகளை தவிர உனக்கென்ன நான் கைம்மாறு செய்துவிடுவேன் என் உதயசூரியனே....

எம் தமிழை அடுத்த தலைமுறைக்கும் அப்படியே கொண்டு செல்லும் ஒரு கடமையைத் தவிர....

சென்று வா ... சூரியனே...பார்வைக்கு வேண்டுமானால் சூரியன் மறையலாம்... ஆனால் மீண்டும் வேறோர் இடத்தில் வேறோர் வடிவில் உனது இருப்பு உணரப்பட்டுக் கொண்டே இருக்கும்....

இப்படிக்கு
உன் உயிரினும் மேலான உடன்பிறப்பு...



**மீண்டும் வருவாய்!**

எத்தனை பேருக்கு ஒரு 95 வயது கிழவனின் மரணத்தில் ஆனந்தம், வன்மம்.

கேட்டால் காரணம் சொல்வார்கள்,

ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்தாராம், அவர்களுக்கென்ன தெரியும். ஈழத்தமிழர்களுக்காக இருமுறை ஆட்சியை இழந்தவன் நீயென்று.

காமராசருக்கு பிறகு அணையாரும் கட்டவில்லையாம், அவர்களுக்கென்ன தெரியும் காமராசர் காலத்திற்கு பிறகு கட்டப்பட்ட 39 அணைகளும் உன் ஆட்சியில் கட்டியதென்று.

காமராசரை திட்டி விட்டாயாம், தோற்கடித்து விட்டாயாம். அவர்களுக்கென்ன தெரியும் என் ஆட்சியே போனாலும் சரி நான் என் ஐயாவை கைது செய்யமாட்டேன் என்று இந்திராவையே எதிர்த்தவன் நீயென்று.

இந்துக்களுக்கு துரோகம் செய்துவிட்டாயாம், அவர்களுக்கென்ன தெரியும் இந்து கோவில்களுக்கு அறநிலையத்துறை அமைத்து 3000 கோவில்களுக்கு மேல்சீர் செய்து கும்பாபிஷேகம் செய்தது நீயென்று.

விவசாயிகளைக் கைவிட்டு விட்டாயாம், அவர்களுக்கென்ன தெரியும் 30 ஆண்டுக்கு முன்பே விவசாயிகளுக்கு முழுமையாய் இலவச மின்சாரம் தந்தவன் நீயென்று, முதன் முதலில் விவசாய கடனை முழுமையாய் தள்ளுபடி செய்தவன் நீயென்று, விவசாயிக்கு நேரடி சந்தை உருவாக்கியவன் நீயென்று.

நீ கட்டிய கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பேருந்து ஏறி, நீ கட்டிய கத்திப்பாரா பாலத்தைத் தாண்டி, நீ கட்டிய சிப்காட்டிலும்., ஐடி... பார்க்கிலும்... பணி செய்து கொண்டே உன் இறப்பை எதிர்பார்ப்பவர்களைக் கண்டால், உள்ளம் குமுறுகிறது.

அதைக் கேலி செய்யும் நண்பர்களைப் பார்த்தால் அவர்கள் ஒருவேளை மரண மற்றவர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மீண்டும் வருவாய், மீண்டும் வருவாய் என்று காத்திருக்கிறேன் தலைவா

-உடன்பிறப்பு




**கலைஞரின் இறுதிப்பயணத்தில் மனம் நெகிழ்ந்த அந்த தருணங்கள்...**

அவரின் குடும்பம்...
உறவுகள் அத்தனையும் புடைசூழ அவர்கள் ஆத்மார்த்தமாய் கண்ணீர்விட்டு கதறி அழுத அந்த காட்சிகள்...

கலைஞரை இத்தனை வயது வரை வாழவைத்தது. அவரின் வாழ்க்கைக்கு பக்க பலமாய் இருந்த குடும்ப உறவுகள் உண்மையான நண்பர்கள்.....இவைகள் தான்.

அம்மா அவர்களின் இறப்புக்கு ஏன் என்று கேட்க நாதியில்லை.. பல நாட்கள் சித்திரவதையில் சிம்ம சொப்பனமாய் இருந்தவரின் இறுதி நாட்கள் நரகம்.

ஜெயலலிதா அம்மையாரின் இறுதிச் சடங்குகளில்எந்த இரத்த உறவுகளும் தோழமைகளும் உண்மையல்ல. போலிகள் சூழ்ந்து அவரின் இறுதி சடங்குகள் நடத்தப்பட்டவை எல்லாம் வேதனையின் உச்சம். அனாதையை போல் ஒரு அரசி புதைக்கப்பட்டார்.

கலைஞரின் மரணம் உணர்த்திய பாடமும், அம்மாவின் மரணம் உணர்த்திய பாடமும் நமக்கு உணர்த்தியது ஒரே ஒரு பாடம் தான்.

குடும்ப உறவுகளை, நண்பர்களை, விசுவாசமானவர்களை சம்பாதித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே...

பதவி பணம் புகழ் இவை அனைத்தும் இருந்தாலும் ....எந்த ஒரு மனிதனும் பாதுகாக்க வேண்டியது குடும்ப உறவுகளை, தன் இரத்த பந்தங்களை, உண்மையான நண்பர்களை...

கலைஞர் பாதுகாத்தார்... பாதுகாத்துக் கொண்டார்....ஒட்டு மொத்த குடும்பத்தின் கண்ணீரில் ஆத்ம சாந்தியோடு விடைபெற்றார்...

நாம் நம் குடும்ப உறவுகளை, இரத்த சொந்தங்களை, உண்மையான நண்பர்களை சம்பாதித்துக் கொள்ள வேண்டும்... அவர்களே நம்முடைய சொத்துகள்.

மரணம் இயற்கையானது...
மரணித்தவனுக்கு மரணத்தின் வலி தெரியாது... ஆனால் அவர்கள் மரணத்தால் வலியை சுமக்கும் இதயங்கள் வேண்டும்...

உறவுகளுக்குள் பகைமை வளர்த்திட வேண்டாம்... நாளை நமக்கும் மரணம் வரும்... மன்னிப்பு கேட்க வேண்டியவர்களிடம் மன்னிப்பு கேட்டுவிடலாம். மன்னிக்க வேண்டியவர்களை மன்னித்து விடலாம்... இரத்த பந்தங்களை பத்திரமாய் வைத்துகொள்ளலாம்...

சுய நலத்தின் பெயரிலும் சூழ்நிலையின் பெயரிலும் உறவுகளை பகைத்து நிம்மதி இழந்து வாழ்வது... மரணிக்காமலே மரணம் அடைவதற்கு சமம்...
மரணத்தின் பாடம்



**உண்மையில் கலைஞர் கர்மவீரருக்கு மெரினாவில் இடம் தரமறுத்தாரா?**

அரசியலில் எதிரெதிர் துருவமாக இருந்தாலும்

எதிர்த்து அரசியல் செய்தாலும் கலைஞர் காமராசர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

அதற்குக் கீழ்காணும் வரலாற்று நிகழ்வுகளே சாட்சி...

காமராசர் மறைந்த அன்று அப்போது காங்கிரசுக் கட்சியின் தலைவர்கள், தேனாம்பேட்டை காங்கிரசு அலுவலகத்திலேயே காமராசர் உடலைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்து,

மற்ற சடங்குகளையும் அங்கேயே நடத்தத்திட்டமிட்டனர்.

முதல்வர் கருணாநிதியின் காதுகளுக்கு இந்தச் செய்தி போனது. கொதித்துவிட்டார் அவர்.

“காமராசர் ஒரு கட்சியின் தலைவர் மட்டுமல்ல. இந்த தேசத்தின் சொத்து, அவரது உடலை ராஜாஜி அரங்கில் வைத்து அரசுமுறைப்படி தான் அடக்கம் செய்ய வேண்டும்" என்றார்.

அப்போது குறுக்கிட்ட அதிகாரி ஒருவர், காமராசர் அப்போது எந்தப் பொறுப்பிலும் இல்லாததைச் சொல்லி,

சில சட்டச் சிக்கல்களைத் தெரிவித்ததோடு, மத்திய அரசிடம் அனுமதி பெற வேண்டிய சட்டவிதியை எடுத்துச்சொன்னார்.

மீண்டும் கோபத்துடன் குறுக்கிட்ட கருணாநிதி,

"நான் சொன்னதைச் செய்யுங்கள்...

காமராசருக்கு இறுதி மரியாதை செய்வதற்கு நாம் யாரிடமும் போய் அனுமதி கேட்க வேண்டிய அவசியமில்லை" என்று கண்டிப்புடன் கூறினார்.

கிண்டியில் காமராசர் நினைவிடம் அமைந்த அந்தப் பகுதி தேர்வு செய்யப்பட்டதன் காரணமே காந்தியாரின் தீவிர பக்தரான அவர் இறந்ததும் காந்தி பிறந்தநாள் அன்றே...

அந்த தீவிர காந்தியின் பக்தரான காமராசருக்கு காந்தி மண்டபம் அருகிலேயே நினைவிடம் தேர்வு செய்யப்பட்டு அவரது உடலை அந்த இடத்தில் தான் தகனம் செய்து நினைவிடம் அமைத்தனர்.

அப்போது அந்த இடம் மிகவும் புதர்கள் அடைந்து கிடந்ததால் அதை சுத்தம் செய்தனர். அப்போது முதல்வராக இருந்த கலைஞரும் அதில் ஈடுபட்டு, வேட்டியை மடித்துக்கட்டி, தலையில் துண்டை தலைப்பாகை போல் கட்டிக் கொண்டு சுத்தம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது .

குமரிக் கடற்கரையில், காமராசருக்கு ஏற்றமிகு மணிமண்டபம் அமைத்தது கலைஞர்.

இங்கு காமராசரின் மார்பளவுச் சிலையும் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. அவரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்குக் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

சென்னைக் கடற்கரை சாலையைக் காமராசர் சாலை எனப்பெயர் மாற்றியது கலைஞர் ஆட்சிக்காலத்தில்...

மீனம்பாக்கம் உள்நாட்டு விமான நிலையம் காமராசர் பெயர் தாங்கி நிற்பதற்குக் காரணம் கலைஞர் ஆட்சி...

விருதுநகரில் காமராசர் பிறந்த இல்லத்தை நினைவகம் ஆக்கியது கலைஞர் ஆட்சியில்...

காமராசர் பிறந்தநாளைத் தமிழகமெங்கும் நினைவு கூர்ந்திடும் வகையில் "கல்விவளர்ச்சி நாள்" என்ற பெயரில் அனைத்துக் கல்விக்கூடங்களிலும் கொண்டாட வேண்டுமென்று அறிவித்து, அதனை அடுத்து வருகின்ற ஆட்சியினர் மாற்றிவிடக்கூடாதே என்பதற்காகவே சட்டமாகவே இயற்றியது கலைஞர்...

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு காமராசரின் தாயார் பெயர் நினைவில் நிலைத்திருக்கும் வகையில்

"அன்னை சிவகாமிஅம்மையார் வளாகம்" என்று பெயர் சூட்டியதும்,

அரசின் பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு சிவகாமிஅம்மையார் பெயரைச்சூட்டி அதை நடைமுறைப்படுத்தியதும் கலைஞர் ஆட்சியில்...

எம்ஜிஆர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் காமராசரின் படம் வைக்கப்பட்டது.

அந்தப் படத்துக்குக் கீழே எந்தப் பொன்மொழி இடம்பெற வேண்டும் என்பதைக் கருணாநிதியிடம் கேட்டார் எம்ஜிஆர்.

அவரது ஆலோசனைக்கேற்ப

'உழைப்பே உயர்வு தரும்' என்ற பொன்மொழியைப் பொறித்தார் முதல்வர் எம்ஜிஆர்.

முதல்வர் கருணாநிதி தனது மகன் ஸ்டாலின் திருமணத்துக்கு வருமாறு காமராசருக்கு அழைப்பு விடுத்தார்.

அப்போது காமராசருக்கு உடல்நிலை சரியில்லை.


ஆனாலும், காமராசரின் வருகை அவசியம் என்று கருதிய கருணாநிதி,

அண்ணாசாலையில் உள்ள உம்மிடி பத்மாவதி திருமண அரங்கில்,

மணமக்கள் அமரும் மேடை வரைக்கும் கார் வருவதற்குத் தோதாகச் சிறப்புவழி ஏற்பாடு செய்தார்.

அதனை ஏற்று, காரிலேயே மேடை வரை வந்து மணமக்களை வாழ்த்திப் பேசினார் காமராசர்.








**புலம்புவதற் கல்ல கலைஞரின் மரணம், கொண்டாடப்பட வேண்டியது.**

ஒருமுறை கூட சிகிச்சைக்கு வெளிநாடு சென்றதில்லை. வேறு மாநில மருத்துவமனைக்கும் உடல்நலக் குறைவுக்காகப் போனதில்லை. அவ்வளவு ஏன் வெளிநாட்டு மருத்துவர்களைக் கூட வர வைத்ததில்லை.

23 மருத்துவக் கல்லூரிகள் தமிழகத்தில். அதில் 19 கலைஞர் கொண்டு வந்தது. தான் கட்டிய மருத்துவக் கல்லூரிகளில், தன்னால் படிக்கவைக்கப் பட்ட டாக்டர்களிடமே கடைசி வரை சிகிச்சை எடுத்துக்கொண்ட தலைவர் கலைஞரின் வாழ்க்கை மகத்தானது.

அவரின் மரணம், சமூகநீதி அரசியலின் எழுச்சியாகக் கொண்டாப்பட வேண்டியது.